(Registered as a Newspaper in Ceylon)
P. M. G. NO. H. A. 59/300 of 1939.

யுத்தாலப் பிரசுரம்

உ
சிவமயம்.

விரோதி ஸூ (1889) ஆவணி மீ உஅ உ ஆரம்பமானது

# இந்துசாதனம்

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினத்துக்காளிலேக்குள்
தமிழ் ரூபா 5.00 — இங்கிலீசும் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 — இங்கிலீசும் தமிழும் 12.00
தொலேவாய்ப்பகுதி 9.00 — இங்கிலீசும் தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினலன்றி கவனிக்கப்படமாட்டா.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.
—அப்பர் சுவாமிகள்

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10.00 — அரைக்கலம் ரூபா 5.50
கால்கலம் ரூபா 4.00 — ஒருஅங்குலம் ரூ. 1.00
அடுத்தமுறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி
காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள்
விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து
மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம்
அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

[ புத்தகம்—ருக ] யாழ்ப்பாணம்:— பிரமாதி ஸூ புரட்டாதி மீ உகஉ (1939 ஒக்டோபர் 9 திங்கட்கிழமை) [ இலக்கம் ருo]

## குருலிங்க சங்கமம்

[அச்சுவேலி சிவஸ்ரீ கு. வைத்தீசுவரக் குருக்கள்]

முற்றொடர்

திருக்கோயிலின் உள்ள நாபி மூல லிங்கமாம். விமானத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்கும லிங்கமாம். அதற்குமுன் உள்ள பலி பீடம் பத்திரலிங்கமாம். இவ்வுண்மைநோக்கியே திருமூலநாயனர்,

தூய விமானமுந் தூலம தாகுமா
லாய சதாசிவ மாகுநற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமா
மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே

என்று அருளிச் செய்தார்.

உயர்ந்த வருணத்தாருள் உறுப்புக் குறைந்தவர்களும், நான்கு வருணத்தாரல்லாதாரும், தங்கள் தங்கள் அதிகாரத்துக்கு இணங்க ஆசாரியரிடத்துத் தீக்ஷைபெற்றுத் தூபியினையும் கோபுரத்தையும் சிவனெனக் கண்டு, அவற்றுக் கேற்ற பத்திர புஷ்பங்களைத் தூவித் துதித்தல் முறையாம்.

சராசரப் பிரபஞ்சம் எங்கும் ஆன்மாக்களை இரக்ஷித்தல் வேண்டிச் சிவபெருமான் இலிங்க ரூபமாக விளங்குகின்ருர். அன்போடு வழிபடுபவர்களுக்கு அவ்வவ்விடங்களிலே வெளிப்பட்டு நின்று அவரவர் வேண்டிய இட்ட சித்திகளை அருளுகின்ருர். மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றையும் முறையாக வணங்குபவர் ஞானசாரியனுல் உண்மை ஞானம் விளக்கப் பெறுவார்கள். இதனை "மூர்த்தி தலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" எனத் தாயுமான சுவாமிகள் உணர்த்தியருளினுர். "சிவலிங்கத்தைத் தினந்தோறும் காலை மாலை உச்சி என்னும் மூன்று காலங்களிலும் பூசிக்க" என்று உபதேசங்கூறுகின்றது. விட்டுணு சிவலிங்கார்ச்சனை செய்தே உலகங்களை ரக்ஷிக்கும் உரிமையை அடைந்தார். பிரமா சிருஷ்டிக்கும் அதிகாரத்தைப் பெற்ருர். சிவலிங்க பூஜாபலத்தினுலே சிலர் சாலோகாதி பதவிகளைப் பெற்ருர்கள். சிவலிங்கபூஜாபலத்தினுலே தேவர் மனிதர் முதலியோர் செல்வத்தோடு வாழ்கின்ருர்கள். சிலர் சத்துருக்களை ஜயித்துப் பூமியை அரசாட்சி செய்தார்கள். சிலர் புத்திர பசு, சௌந்தரியம் முதலியவற்றை அடைந்திருக்கிருர்கள். சகல தருமங்களும் இடையூறின்றி முற்றுப் பெறும் என்பதும், தம்மை அன்போடு வழிபடுபவர்களுக்குக் குழைந்து நிற்பார் என்பதும் காமாட்சி அம்மையார் செய்த சிவபூஜையினுலே பெறப்படும். சகல பாவங்களுக்கும் பிராயச்சித்தமாய் உள்ளது சிவ பூஜையாம் என்பது கயமுகாசுரன், குபதுமன் முதலாயினேரைச் சங்கரித்தமையாலே பாவம் ஒன்றுப் பெறுத விநாயகர், சுப்பிரமணியர் செய்த லிங்கபூஜையினுலே பெறப்படும். மேலும், அகங்காரப்புக்குப் பரிகாரமாய் முடிவதும், அபிபாதகத்துக்குப் பரிகாரமாய் உள்ளதும், பிரமகத்தி நோய்க்கு மருந்தாய் உள்ளதும், காலத்தைக் கடக்கச் செய்வதும் இலிங்கவழிபாடேயாம் என்பது பிரமா, விட்டுணு, தக்கன், அகத்தியர், மார்க்கண்டேயர் முதலாயினேர் செய்த லிங்க வழிபாட்டினுலே பெறப்படும். இதுபற்றிய திருஞான சம்பந்த சுவாமிகளும் "ஊத்தேர்ந்தாயின கொண்டுநின் பொன்னடி—யேத்தாதா ரில்லை யெண்ணுங்கால்" என்றருளிச் செய்தனர். "வண்டுளருந் தண்டுழாய் மாயோ னிழுமாப்புர்—புண்டரிகப் போதுறையும் புத்தேத ளிறுமாப்பும்—அண்டர்தொழ வாழுனிறுமாப்பு மாலால—மூண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்" என்பது புராணம். சிவலிங்க வழிபாடு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் செயற்பாலதேயாம். மலம் நீங்கிய சிவஞானிகளும் பூர்வமல வாசனை தாக்காமைப் பொருட்டும், சிவானந்தம் மேன்மேல் வளர்தற் பொருட்டும் சிவலிங்கம் முதலிய திருமேனியையும் மெய்யடியார்களையும் வழிபடல் வேண்டுமென்று சிவஞான போதம் முதலிய நூல்களில் உணர்த்தப்பட்டது. திருக்கோயிலுள் விருக்கும் திருமேனியை வழிபடல் ஞானி முதல் நான்கு மார்க்கத்தாருக்கும் இன்றியமையாக் கடனேயாகும். சிவாநுபூதிப் பெருவாழ்வுடையார்களாகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர், திருநாவுக்கரசுநாயனர், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் சமயாசாரியர்கள் நால்வரும் தலந்தோறுஞ் சென்று சிவலிங்க வழிபாடு செய்து, தமிழ்வேதம் பாடியமையே இதற்குச் சான்ருகும். இது ஞானத்திற் சரியை எனப்படும். சிவலிங்க வழிபாடு நான்கு பாதத்தாராலும் செய்யப்படுமாயினும், அது அவரவர் கருத்துவகையால் வேறுபடும். சரியாபாதத்தினர் சிவலிங்கம் முதலிய திருமேனியையே சிவனெனக் கண்டு வழிபடுவர். அவர்களுக்குச் சிவபெருமான் அங்கேவெளிப்பட்டு நின்று அருள் செய்வர். கிரியா பாதத்தினர் நிஷ்களப் பொருளாகிய சிவபெருமான் மந்திரங்களினுல் சிவலிங்கம் முதலிய திருவுருக் கொண்டாரென்று மந்திர கிரியைகளினுலே வழிபடுவர். யோகபாதத்தினர் இருதயமெங்கும் வியாபித்திருக்கும் சிவபெருமான் இந்தச் சிவலிங்கத்திலும் அதிட்டித்து நின்று பூசை கொள்வார் என்று சாத்திய மந்திரங்களினுலே வழிபடுவர். அவர்களுக்குக் கடைந்த உதயத் தோன்றும் அக்கினிபோலவும், கறந்தவிடத்துத் தோன்றும் பால்போலவும் அவ்வப்பொழுது வெளிப்பட்டுநின்று அருள் செய்வர். ஞானிகள் இம்மூவிறத்தாரும் போல ஓரிடமாகக் குறியாது அன்பு மாத்திரத்தால் அங்கே வழிபடுவார்கள். அவர்களுக்குச் சிவபெருமான் கன்றை நினைந்த தலையீற்றுப் பசுவின் முலைப்பால்போல அவ்வன்பே தாரகமாகக் கருணைமிகுதியினுல் எப்பொழுதும் வெளிப்பட்டு நின்று அருள் செய்வர். அது "திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனி தன்னை" என்னும் சிவஞானசித்திச் செய்யுளால் உணரப்படும். தற்காலத்தில் அநுபவ ஞானமும் சாஸ்திர ஞானமும் கிரமமாகப் பெருதவர் சிலர் தங்களை ஞானிகளெனச் சொல்லிக் கொண்டு, சரியை கிரியைகளை இழந்து, மீளா நகரத்துக்கு ஆளாகின்ருர்கள்.

பீட லிங்க ரூபமாயுள்ள சிவலிங்கமானது சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கன்மசாதாக்கியம் என்னும் பஞ்ச சாதாக்கியங்களுள் ஒன்ருகிய கன்மசாதாக்கியமாகும். கந்த புராணத்திலே சுப்பிரமணியக்கடவுள் "இவகை யுருவிலொன்றை" சிவாகம விதியாற் பூசித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சதா—எப்பொழுதும். ஆக்கியம்—புகழப்படுவது. ஆகவே, நாமரூபாதிகள் இல்லாத சுத்தசிவம், நாமரூபமுடையவராய் அன்பர்களாற் புகழப்படுபவர் என்பது கருத்து.

கன்மசாதாக்கியமானது இச்சாசத்தியின் அம்சமாய்த்தோன்றியது. சிவபெருமான் ஆன்மாக்களது நியான பூஜா நிமித்தமாகச் சகள நிஷ்களத் திருமேனி கொண்டதில் ஆவுடையாளுடன் கூடிய லிங்கமாய். சிவலிங்கம் ஞானசத்தியையும் அதன்கீழ்க் காணப்படும் ஆவுடையாள் கிரியாசத்தியையும் குறிக்கும். சிவலிங்கத்திலே எப்பொழுதும் ஓர் அசைவு உண்டு. அதுவே சத்தியாகும். ஆன்மாக்களின் பாசத்தை நீக்குவதற்காக அசைசற் சத்தி இலிங்கத்தைச் சுற்றிக்கொண்டு இருக்கிறது. அவ்வசைவு லிங்கத்தில் உண்டென்பதை உணர்த்துவதற்காக ஆவுடையாள் இலிங்கத்தைச் சுற்றிக் கிடக்கி அமைந்திருக்கிறது. ஆவுடையாளின் ஓர் பக்கத்தில் நீண்டிருக்கும் கோமுகியானது ஆன்மாக்களைத் திருநோக்கம் செய்யும் குறிப்பாகும். சிவசாதாக்கியம் முதலிய நான்கும் ஒவ்வொன்று பற்றி, ஐந்தாவதாகிய கன்மசாதாக்கியத்தை அடைந்திருத்தலின், இது மற்றைய சாதாக்கியங்களினும் விசேடமுடையதாய் இருக்கும்.

தொடரும்

---

திருமாந்துறை—பண்
—நட்டராகம்

நீலமாமணி நித்திலக் கோத்தொடு
நிரைமலர் நிரந் துந்தி
ஆலியாவரு காவிரி வடகரை
மாந்துறை யமர் வானை
மாலு நான்முகன் றேடியுங்
காண்கிலா மலரடி யிணைநாளுங்
கோல மேத்திநின் றடிமின்
பாடமின் குற்றவ லிலியானே.

—சம்பந்தசுவாமிகள்.

---

## ஆசிரியர் அறையில் திருட்டு

### எதிரிக்கு மொத்தம் ஒன்றரை வருஷக் கடுழிய மறியலும் 3 வருஷப் பொலிஸ் மேற்பார்வையும்

வல்லுவெட்டித்துறை வாசியாகிய கந்தசாமி சிதம்பரநாதனென்னும் இருபத்திரண்டு வயதுடைய வாலிபன்மீது இரு குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டதாக 2-10-39ந் திகதிப் பத்திரிகையிற் குறிப்பிடலாமோம். அதில், எதிரி முதலாவதாகத் தெரியிலுள்ள யத்திய கல்லூரியில் உபாத்தியாயராயிருக்கும்வெஸ்ஸெண்ட் C. A. சிமித் என்பவருடைய வீட்டிலிருந்து களவுபோன சாமான்களுள் ஒன்ருகிய ஒரு மணிக்கூட்டை வைத்திருந்ததாயும், இரண்டாவதாக வீட்டை உடைத்து இரண்டு லைற்றுப்பேருக்களைக் களவாடியதாயும் குற்றஞ்சாட்டப்பட்டதாகஎழுதியிருந்தோம். இக் குற்றச்சாட்டுகளில் முதலாவது குற்றச்சாட்டில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் நீதிபதி திரு. E.V.R. சமாவிக்கிரம ஆறுமாதக் கடுழிய மறியற்றண்டனையும், இரண்டாவது குற்றச்சாட்டிலும் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் ஒருவருஷக் கடுழிய மறியற் றண்டனையும் இத் தண்டனையை அனுபவித்த பின்னர் மூன்றுவருஷத்திற்குப் பொலிஸாரின் பாதுகாப்பிலிருக்கவேண்டுமெனவும் கூறினர். (தமது நிருபர்.)

---

## யுத்த சமாச்சார வியாக்கியானங்கள்

### மூன்ருவது பிரசங்கம்

3-10-39 செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணி
Dr. S. C. போல் அவர்கள் பேசியது

செப்டெம்பர் மாதம் 26-ந் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 2-ந் திகதிவரையும் நடந்த நிகழ்ச்சிகள்

#### போலந்து

இப்பொழுது சண்டையின் நாலாவது கிழமையில் நடந்த செய்திகளைப் பற்றிப் பேசுவோம். 'வார்சோ' நகரம் சத்துராதியினுடைய கையிலே அகப்படாதபடி அதைக் காப்பதற்காகப் போலந்து தேசத்தவர்கள் எத்தனையோ இடைஞ்சல்களும் ஆபத்துக்களும் இருக்கவும் மிகவும் வீரத்தோடு சத்துராதியை எதிர்த்துப் பயங்கரமான சண்டை செய்தார்கள். அப்படியிருந்தும் ஜேர்மனி போலந்தைத் தோல்வியடையச் செய்து, 'வார்சோ' நகரத்தையும் பிடித்துவிட்டது. இது இந்தக்கிழமை நடைபெற்ற ஒரு முக்கியமான சம்பவம்.

போலந்து தேசத்தின் சரித்திரம் நெடுங்காலமாக அடிக்கடி மாற்றப்பட்டு விடுகிறது. அது வேர்சேல்ஸ் உடன்படிக்கைக்குப் பின்புதான் திரும்பவும் ஒரு சுதந்திரநாடாகினது. ஆனல், அதற்கிடையில் இப்பொழுது அது இன்னுமொருமுறை பங்கிடப்பட்டுவிட்டது. ஜேர்மனி ஒரு பங்கை எடுத்துக்கொண்டது; அதனிலும் பெரிதான மற்றப் பங்கை ருஷியா எடுத்துக்கொண்டது. ருஷியாவினுடைய சமத்துவக் கொள்கையுள்ள அரசாட்சியை ஜேர்மன் நாசித் தலைவர்கள் சிறிது காலத்திற்குமுன்புகூட அடிக்கடி வெறுத்து ஒதுக்கினவர்கள். அப்படி ஒதுக்கப்பட்ட அரசாட்சிதான் இப்பொழுது போலந்திற் பெரும்பகுதியிலே நாட்டப்பட்டிருக்கிறது. இதுதான் போலந்தின்மீது ஜேர்மனி போர் தொடுத்ததனுல் வந்த பலன். போலந்து தேசம் தூரத்திலே தனியாக இருக்கிறபடியினுலே பிரித்தானியர் பிரான்சு என்னும் இரண்டுதேசங்களும் போலந்துக்கே நேராகச் சென்று அவர்களுடைய வீரச் சண்டையிலே கலந்து உதவி செய்ய முடியவில்லை.

ஆனல், விரைவிலே போலந்து தோல்வியுற்றது ஒரு எதிர்பாராத காரியமல்ல; போர் தொடங்குமுன்பு போலிஷ் சேனதிபதி நேசக்கட்சியின் இராணுவத்தாருக்கும் பின்வருமாறு ஒரு அதிசயமான செய்தியை அனுப்பியதாகச் சொல்லப்படுகிறது:- "நாங்கள் போர் புரிவோம். எங்களுடைய தேசத்திற் பெரும்பாகம் பகைவரால் அழியும். சகிக்க முடியாத துன்பங்களும் எங்களுக்கு நேரிடும். ஆனல் நீங்கள் எங்களுக்கு உதவி செய்யவந்தால் நாங்கள் மீண்டும் உயிர்த்தெழுவோம்." இவ்விதஞ் சொல்லியதிலிருந்தே அவர்கள் தோல்வியை எதிர்பார்த்தார்களென்பது விளங்கும்.

பிரதமமந்திரி பின்வருமாறு கூறியிருக்கிருர்:- "ஐரோப்பிய தேசங்களுக்கெல்லாம் எப்பொழுதும் நீராத ஒரு பயமுண்டு. அதென்னவென்ருல், ஜேர்மனி தங்கள்மீது படையெடுத்துத் தங்களைத் தாக்குமென்பதுதான். இந்தப் பயத்தை நாங்கள் நீக்கவேண்டும். ஐரோப்பியர் சுதந்திரராக வாழவேண்டும். அவர்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்ற அவர்களுக்கு நாங்கள் உதவி செய்ய வேண்டும். இந்த நோக்கங்களோடுதான் நேசக்கட்சியினர் சண்டை செய்யத் தொடங்கியிருக்கிருர்கள்." இவ்விதம் பிரதம மந்திரியினுலே எடுத்துக்காட்டப்பட்ட இந்த நோக்கங்கள், போலந்துதேசம் இரக்கமின்றி அழிக்கப்பட்டிருக்கிறபடியால், இன்னும் பெலமடைகின்றன.

#### ருஷியஜேர்மன் சமாதான முயற்சி

2. போலந்து தேசம் தோல்வியுற்றுப் பாகமும் பிரித்தபின்பு வேறுசில காரியங்கள் வளர்ந்து வருகின்றன. அவைகளினுலே நேசக்கட்சிக்குப் புதிய தொந்தரவுகள் ஏற்படுகின்றன போலும். ஜேர்மனியும் ருஷியாவும் ஒருவருக்கொருவர் அன்னியோன்னியமான உதவி செய்வதற்கென்று "சமாதானமுயற்சி" என்று சொல்லி ஒரு ஒப்பந்தம் செய்திருக்கின்றன. வெளியிடப்பட்டிருக்கும் அந்த ஒப்பந்தத்திலே இராணுவஉதவியைப்பற்றி ஒன்றுங் குறிப்பிடக் காணேம். ஆனல்; அதிலே யுத்தத்தை நிறுத்துவதற்கும், யுத்தம் நில்லாமல் தொடர்ந்து நடைபெற்ருல் அப்பொழுது ஆகவேண்டிய காரியங்களைப்பற்றிக் கலந்தாலோசித்துக் கொள்ளுவதற்கும் ஜேர்மனியும் ருஷியாவும் உடன்பட்டிருக்கின்றன. ஜேர்மனிக்காக ருஷியா போரிற் கலந்துகொள்ளுமென உலகம் நம்பவில்லை. ருஷியாவுடன் சண்டை செய்யும் நோக்கம் நேசக்கட்சிக்கு இல்லை. ஆனல் ருஷியா நேசக்கட்சியை யெதிர்த்துச் சண்டை செய்ய விரும்புமோவென்பது இனித்தான் தெரியவரும். இவ்விஷயமாக பிரிட்டிஷ் பொதுஜன அபிப்பிராயம் என்னவென்பது தெளிவாக விளங்கும். சமர் செய்வதென்று ருஷியா பயமுறுத்தினுல், நேசக்கட்சியினரும் சமர் செய்யச் சித்தமுள்ளவர்களாகத்தா னிருப்பார்கள். ருஷிய ஜேர்மன் ஒப்பந்தம் இப்பொழுது நேசக்கட்சியினராலே போர் தொடங்கப்பட்டதன் நோக்கத்தை மாற்றிவிடவில்லை. சுதந்திரம் காரணமாகவே இப்பொழுது சண்டை செய்யப்படுகிறது. அதிலும் யுத்தம் தொடங்கிய பின்பு ஜேர்மனியின் செய்கைகளெல்லாம் சுதந்திரத்தை மீளவும் நிலைநாட்டும்வரைக்கும் பின் வாங்காமல் மும்முரமாகச் சண்டை செய்யும்படி தூண்டுகின்றன.

3. இதற்கு முன்புபோலவே இன்னும் ஹிற்லரும் ஸ்டாலினும் ஒருவரையொருவர் நம்பிக்கையீனத்தோடும் சந்தேகத்தோடும் கவனித்துக் கொள்ளவேண்டியிருக்கிறதென்ப

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழக தீயதேல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ஞு புரட்டாதி மீ உ௩உ திங்கட்கிழமை

## மீண்டு மாண்ட போலண்டு

போலண்டு எனச் சொல்லப்படும் பெரிய ராச்சியத்தை இப்பொழுது ஜர்மனியரும் ருஷியரும் பங்கிட்டுக் கொண்டார்கள். இந்தப் போலண்டு 700 வருட காலமாக அதாவது பதினெட்டாம் நூற்றாண்டு முடிய, சுயராச்சிய மாகவே இருந்தது. 1772-ம் ஆண்டிலும் 1793-ம் ஆண்டிலும், 1795-ம் ஆண்டிலும் இங்ஙனம் முறையே புருஷிய (ஜர்மனிய) ராலும், ருஷியராலும் அவுஸ்திரியராலும் பங்கிடப்பட்டது. வல்லரசுகள் போலண்டுச் சனங்களுடன் மாறுபட்டு யுத்தஞ் செய்த காலத்திலும் அவர்களை வென்று நசித்த காலத்திலும் அந்தப் போலண்டினர் தங்கள் அபிமானத்தையும் சுய கௌரவத்தையுந் துறந்தார்களல்லர்; ஒருகாலத்தில் இல்லாவிட்டாலும் இன்னொருகாலத்திலே தங்கள் சுயராச்சியத்தைப் பெறுவோமென்ற அபிமானம் அந்தப் போலிஷ் சாதியினருக்குப் பாரம்பரியமாக உண்டாம்.

சென்ற மகாயுத்த முடிவிலே வேர்ஸெயில்ஸ் உடம்படிக்கையின்படி போலண்டினர் சுயராச்சியமடைந்தனர்; வில்னு என்னும் ஊரைப் போலண்டினர் சேர்த்தனர். 1920-ம் ஆண்டில் ருஷியருடன் சமர்செய்து உக்ரயின் நாட்டிற் பெரும் பாகத்தைக் கைப்பற்றித் தம்முடைய நாட்டுடன் சேர்த்தனர். அப்படியாக்கப்பட்ட போலண்டுதான் இற்றைக்குச் சிலவாரங்கட்குமுன், அதாவது ஜர்மனியர் இப்பொழுது தாக்குமுன் இருந்த சுவாதீனத்தோடுகூடிய போலண்டாகும். இந்தப் போலண்டு இடையிலிருப்பதனால், ஒருபக்கத்திலே ஜர்மனியரும் மற்றப்பக்கத்திலே ருஷியரும் தம்மை நேரில் வந்து தாக்குதல் முடியாதென்ற காரணம்பற்றிப் பிரான்ஸியர் இப் போலண்டினர்க்குக் காலந்தோறும் பண உதவிகளும் இன்னும் தாம் செய்யக்கூடிய உதவிகளெவைகளோ அவைகளையுஞ் செய்து வந்தார்கள். டான்ஸிக் தானத்திற்கு அணித்தாக, பால்ரிக் கடற்கரையில் ஜிடினியா என்னும் துறைமுகத்தை அரண் செய்யும்படி போலண்டினருக்குப் பணங் கொடுத்தவர்கள் பிரான்ஸியரேயாவர்.

இது இப்படியிருக்க, செய்க்கோஸ்லோவக்கியாவை ஹிட்லர் கைப்பற்றினர். அதற்கு முந்தியே அவுஸ்திரியாவையும் ஜர்மனிய சர்வாதிகாரி தம் வசமாக்கினரல்லவா! இன்னும் தாம கொண்ட நோக்கங்களைப் பூர்த்தியாக்குவதற்கு, ஹிட்லர் டான்ஸிக் வடபோலண்ட் என்னுமிடங்களைத் தமக்குத் தானமாக்க வேண்டுமென நோக்கங் கொண்டார்; பிரான்ஸியருக்கும் போலண்டினருக்கு மிடையேயுள்ள விசேஷமான கூட்டுறவைச் சிதைத்துவிட வேண்டுமென ஹிட்லர் யோசித்தார்; இப்படியெல்லாம் தாம் நினைத்தபடி செய்யப்புகின் ருஷியா சும்மாவிருக்கமாட்டாது. தம்முடன் மாறுபட்டுச் சமருக்கு வருமென்பது ஹிட்லருக்குத் தெரியும். உடனே ஹிட்லர், ஸோவியற் ருஷிய தலைவராகிய ஸ்ராலினுடன் ஒரு கூட்டுறவு உடம்படிக்கை செய்துகொண்டு போலண்டிலே புகுந்தார். 18 நாட்களாக, பாரத யுத்தம் போன்ற கொடிய யுத்தம் நடந்தது. போலண்டினர் தோல்வியுற்றனர்; அற்றம் பார்த்திருந்த ருஷியரும் சங்கேதப்படி தமசைனியத்துடன் ஒரு பக்கத்தால் வந்து போலண்டிட் புகுந்தனர். எல்லாவகையாலும் குற்றுயிருடன் கிடந்த போலண்டை ருஷியர் அறவே முடித்துவிட்டனர். இப்பொழுது போலண்டு ஜர்மனிய ருஷியரால் பங்கிடப்படலாயிற்று; ஆனால் பங்கிடும் விஷயத்திலே ஹிட்லர் நினைத்தபடி அவருக்குப் பங்கு கிடைக்குமோ என்பது சந்தேகம். ஸ்ராலின் பகுத்துக் கொடுக்கும் பங்கினையே ஹிட்லர் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் நிலைமை வந்துவிட்டது. பங்கு பிரிக்கப்படும்போது போலிஷ்-ரூதேனியா, உக்ரயின் என்னும் இந்தப்பாகங்கள் ருஷியருக்குச் சேரவேண்டிநேருமெனச் சொல்லப்படுகின்றது. இந்த இரண்டு பாகங்களிலும் முறையே மண்ணெண்ணெய் கோதுமையென்னு மிவைகள் அதிகமாகவுண்டாம். இவைகளைப் பெறலாமென்ற ஆசையை ஹிட்லர் விட்டுவிடவேண்டியதாகும். உவார்ஸோ பட்டினந்தானும் இரண்டாகப் பிரிக்கப்படுமென்று அறியக் கிடக்கின்றது. ருஷியரும் ஜர்மனியரும் தங்கள் நாடுகளுக்கு ஒரேயெல்லையை வைத்துக்கொண்டு நீடித்தகாலம் சமாதானமாக விருக்கமாட்டார்களென்று அனுபவமுடையோர் சொல்லுகிறார்கள். இந்த நியாயத்தினைற்றான் ஹிட்லர் இப்பொழுது பேசும் சமாதானப் பேச்சில் சுயாதீனத்தோடு கூடிய சிறியபோலண்டைத் தாபிக்க வேண்டுமென்கின்றாராம்.

இப்பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகளினால் வலிமைபெற்றிருப்பது ஜர்மனியைக் காட்டிலும் ருஷியாவேயாகும். இதனைக் கண்டு, ரூமேனியா துருக்கி பால்க்கன் நாடுகள் பயப்படுகின்றன; இதனாற்றான் துருக்கியர் விரைவிற்போய் ருஷியருடன் சமாதானம் பேசினர். மேலே சொல்லப்பட்ட நாடுகளுக்கு மாறாக இப்போதைக்கு ஏதுங் கருமஞ் செய்யப்போவதில்லையென ருஷிய தலைவராகிய ஸ்ராலின் வாக்குறுதி செய்திருக்கிறாராம்.

இனி, வீழ்ச்சியடைந்துள்ளதாகிய போலண்டைப்பற்றிச்சொல்லியபோது ஹிட்லர்; பழைய போலண்ட இனியொருபோதும் வரப்போவதில்லையென்கின்றார். இது நிசமென்று சொல்ல எவராலும் முடியாது. போலண்டு பழைய சுவாதீனத்தை அடையுமோ அடையாதோ, இவைகளை யார் அறிவார்!

—

## காலாட்படை வீரர் எழுவருக்குக் காயம்

டம்புல்லாவில் லோறிகள் மோதுண்டமையே காரணம்

சென்ற புதன்கிழமையன்று திருக்கோணமலையிலிருந்து இலங்கைக் காலாட்படை வீரரை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த ஒருலொறி தம்புல்லையில் மற்றொரு லொறியுடன் மோதியது. படைவீரர்கள் லொறியினின் றும் தூக்கி வீசப்பட்டனர். எழுவர் காயமடைந்தனர். காயமடைந்தோர்கள் யாவரும் குருநாகலைப் புகையிரத நிலையத்திற்கு கார்மூலம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். படுகாயமடைந்த மூவர் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர்.

# தந்திச் சமாசாரங்கள்

## பாராளுமன்றத்துப் பொதுசனசபையில் பிருத்தானிய மந்திரியாகிய மிஸ்ரர் சேம்பர்லேன் கூறியவை சில

ஜர்மனிய ருஷியர் இந்தச் சமையத்திற் பேசும் சமாதானத்தைப் பற்றிப் பிருத்தானிய பாராளுமன்றப் பொதுசனக் கூட்டத்திற் பெரும் விவாதம் நடைபெற்றது; அந்தச்சமையத்தில் மிஸ்ரர் சேம்பர்லேன் யுதத சம்பந்தமான சில இரகசியங்களை வெளியிட்டுள்ளனா:—

மிஸ்ரர் சாம்பர்லேன் "சென்ற வாரத்தில் இப்பொழுது நடக்கும் யுத்தவிஷயமாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. சென்ற செப்டம்பர் மீ 26உ ஜர்மனிய இராசதந்திரியாகிய ஹேர் வொன் றிப்பென்ரொப் மாஸ்கோ நகரத்திற்குச் சென்று ஸோவியற்ஸ் அதிகாரிகளுடன் சில விஷயங்களை அந்தரங்கத்தில் யோசித்துள்ளார். அந்த விஷயம் செப்டெம்பர் மீ 28உ வெளிவரலாயிற்று. போலண்டினை ஜர்மனியரும் ருஷியரும் தங்களுள் ஒற்றுமைப்பட்டுப் பங்கிட்டுக் கொண்டனர்; அந்தப் பங்கில் ஜர்மனியருக்குரிய பாகமே சிறந்தது. ஜர்மனிக்கு எதிராகப் பிரான்ஸியரும் நாமுஞ் செய்யும் யுத்தத்தை நிறுத்திச் சமாதானங் கொள்ளவேண்டுமென்ற பேச்சு இப்பொழுது ருஷிய ஜர்மனியருக்கிடையே தொடங்கியிருக்கிறது. நாங்களும் பிரான்ஸியரும் அதிகம் யோசித்துவிட்டு ஈற்றில் யுத்தந் தொடங்கிய நோக்கத்தை எல்லீரும் அறிவீர்கள்; ஜர்மனிய ருஷியர் பேசும் சமாதானத்தில் மெலிய வெருட்டுக் காணப்படுகின்றது. ஆனால், இந்த வெருட்டுக்குப் பயந்து நாங்களாவது பிரான்ஸியராவது எந்த நோக்கத்தைக் கொண்டு யுத்தந் தொடங்கினோமோ அந்த நோக்கம் கைவந்தாலொழியச் சமரை விடப்போவதில்லை. போருக்குக் காரணர் ஜர்மனியரேயல்லாமல் நாங்களல்ல; ஜர்மனியருடைய உடம்படிக்கைகளெல்லாம் நிலையற்றன. யுத்தம் நீடித்து நடக்கவேண்டுமென்பதை எவரும் விரும்பவில்லை; ஆனால் ஜர்மனியருடைய அக்கிரமத்திற்கு முடிவு காணலலாமல் யுத்தத்தை விடுவதில்லை யென்பதே எங்கள் கொள்கை; பிரான்ஸியர் கொள்கையும் இதுவே;

### மேற்கு யுத்தமுனையில் வெற்றி பெற்று வருதல்

"மேற்கு யுத்த முனையிலே பிரான்ஸியர் நாளுக்குநாள் முன்னேறியே வருகிறார்கள்; ஜர்மனியருக்குரிய பல தானங்களையும் பிரான்ஸியர் நாள்தோறும் கைப்பற்றுகிறார்கள்.

பிருத்தானிய சைனியத்தில் ஒரு பெருந்தொகையைப் பிரான்ஸிற்கு அனுப்பியிருக்கிறோம்; எங்கள் சைனியமும் பிரான்ஸிய சைனியத்துடன் நின்று பகைவருக்கு மாறாகச் சமர் புரிகின்றது. இதனையிட்டு நாங்கள் பெருமையடைகின்றோம் ஆகாயப்படை விஷயத்திலும் எங்கள் ஆகாயப்படையும் பிரான்ஸிய ஆகாயப்படையும் பகைவருடைய ஆகாயப்படையைத் தாக்கிப் போர் செய்கின்றன. ஜர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்கள் பலவற்றை எங்கள் ஆகாயப்படை தேடித் தேடிக் குண்டிட்டுச் சிதைக்கின்றன. எங்கள் கடற்படை ஜர்மனிய கப்பல்களைத் தூரத்தில் ஓட்டிவிடுகின்றன.

வியாபார விஷயத்தில் எங்களுக்கு எவ்வகையான இடையூறுமில்லை; அமரிக்காவுக்கும் இங்கிலாந்திற்குமிடையில் எங்கள் வியாபாரக் கப்பல்கள் பொருள்பண்டங்களை ஏற்றிக்கொண்டு இடையறாது போக்குவரவு செய்கின்றன. எங்களுடைய சில கப்பல்கள் பகைவர்களுக்கு இரையானது மெய்யே; ஆனாலும் பகைவர்கள் தெரிவிக்கிற அவ்வளவு தொகையான கப்பல்கள் சேதம் போகவில்லை. பகைவர்களுடைய ஆகாயப்படை பல சேதமடைந்தன. ஜர்மனியர் யுத்தத்திற் சம்பந்தப்படாத சாதியாருக்குரிய பல வியாபாரக் கப்பல்களை யுத்த தருமத்திற்கு விரோதமாகக் கடலுள் அமிழ்த்தி வருகின்றனர். அப்படி ஜர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்கள் கடலுள் அமிழ்த்திய கப்பல்களின் தொகை இற்றைவரையில் ஏழாகும். அவர்களுடைய வெடிகுண்டு வேலையினும் ஆகாயவிமானங்கள் வெடிகுண்டிட்டும் கடலுள் அமிழ்த்திய கப்பல்களின் தொகை 8.

எங்களுடைய ஆதிக்கத்திலுள்ள நியூஸீலண்ட் ரொடீஷியா முதலிய சுதந்தர நாடுகளிலும் எங்களுக்குத் துணையாகச் சைநியங்கள் திரட்டப்படுகின்றன;

இனி, ருஷியர் முதற் காரணப் பொருள்களை ஜர்மனியருக்குக் கொடுக்க அவர்கள் ருஷியருக்கு யுத்தக் கருவிகளையும் ஏனைய பொருள்களையுஞ் செய்து கொடுப்பதற்குப் பரஸ்பரம் ஒழுங்கு செய்துகொண்டார்களெனவும் அறியக்கிடக்கின்றது..."

### இத்தலியருடைய நோக்கம்

4-10-39

இரண்டாமுறையும் ஐரோப்பிய மகாயுத்தமொன்று மூண்டு சனங்களை நாசமாக்காதபடி சமாதானத்தை ஆக்கிவிடவேண்டுமென்பதே இத்தலியரின் நோக்கமாம். யுத்தத்தில் சம்பந்தப்படும் விஷயத்தில் இத்தலியர் தற்பாதுகாப்புக்காகச் சமர் புரிவரேயொழிய வேறு எவ்விதத்திலுஞ் சமரிற் பிரவேசிக்கமாட்டார்களாம். இப்பொழுது நடக்கும் யுத்தத்திற் சமாதானம் பேசுவதற்கு இத்தலியே தலையிட்டிருக்கின்றன என்ற வதந்தி ஆதாரமற்றதாம்.

### ஜர்மனிய வியாபாரக் கப்பல் அகப்படுத்தப்பட்டமை

பிரான்ஸிய "சப்மறயின்" கப்பலொன்று ஒரு ஜெர்மனிய வியாபாரக் கப்பலைப் பிடித்துப் பிரான்ஸிய கரையிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டதாம்.

### கிரேக்க கப்பல் பிடிக்கப்பட்டமை

ஜர்மனிய சப்மறயின் கப்பலொன்று கிரேக்கருக்குரிய வியாபாரக் கப்பலைத் தாக்கிக் கடலுள் அமுக்கிவிட்டு அதிலுள்ள கப்பற்காரரை ஏற்றிக்கொண்டுபோய்க் கரை சேர்த்ததாம். அவர்களுடைய தொகை 28. அவர்கள் தாங்கள் 36 மணிநேரம் குறித்த சப்மறயின் கப்பலில் இருந்ததாகவும் ஜர்மனியர் தங்களை வெகு மரியாதையாக நடத்தினார்களெனவும் இறங்கிக் கரைசேர்ந்தபோது சொன்னார்களாம். அந்தச் சப்மறயின் கப்பலுக்குரிய வள்ளமே அவர்களைக் கொண்டுவந்து கரையில் சேர்த்ததாம்.

### பின்னரும் சுவீடின்கப்பல் அகப்படுத்தப்பட்டமை

5-10-39

சுவீடினுக்குரிய இரண்டு வியாபாரக் கப்பல்கள் ஜர்மனிய கடற்படையாற் பின்னரும் அகப்படுத்தி ஜர்மனிய துறைமுகத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டன. இக் கப்பல்கள் கடதாசிச் 'சிப்பங்களும்' கடதாசிக்குரிய முதற் காரணப் பொருள்களையும் ஏற்றிச் சென்றனவாம். இப்படியான கப்பல்களின் போக்கு வரவுக் காலங்களை அறிதற்கு ஜர்மனியர் ஏற்றிச்செலலுங் கப்பல்களை ஏற்படுத்தியிருக்கிறார்களாம்.

### ஜர்மனியருக்குரிய கப்பல் கடலுள் மூழ்கியது

இரும்புப் பாலத்தை ஏற்றிக் கொண்டு வருக்கு மீண்ட எண்ணுயிரத் தொன் கொண்ட ஜர்மனிய கப்பலொன்று பொர்க்குமஎன்னுந் துறைக்கணித்தாய்ச் செலலும்போது வெடிசாக்க வலையில் அகப்பட்டு மாண்டதென்று பக்கத்திலே சென்ற கப்பல்களின் மாலுமிகள் தெரிவிக்கின்றார்களாம்.

### சீன யப்பானிய யுத்தம் சீனர் வெற்றிபெற்று வருகின்றனர்

6-10-39

சங்ஷா யுத்தத்திலே சீனர் யப்பானியரைப் புறங்கண்டு வருகின்றார்கள்; பின்னுறாய் என்னுந் தானத்தைச் சீனர் திருப்பிப்பிடித்துவிட்டனர்; யன்ரியன் என்னுமிடமும் திருப்பிப் பிடிக்கப்பட்டது. யப்பானியர் நிர்வகித்து நின்று யுத்தஞ் செய்ய ஆற்றாதவர்களாய்ப் புறங்கொடுத்துச் செல்லுகின்றனர். இப்பொழுது நின்று போர் செய்யும் சீன சைநியம் சென்ற இரண்டு வருடங்களாகப் புதிய முறையிற் பயிற்றப்பட்ட முப்பது லட்சம் வீரர்களைக் கொண்டதாம். இந்தப்படையில் இன்னமும் பெருந்தொகையான வீரர்கள் இப்பொழுது யுத்தத்திற்சம்பந்தப்படாதபடி வைக்கப்பட்டிருக்கிறார்களாம். சீன சைநியம் இரண்டு தினங்களில் யப்பானியரை 38 மைல் புறங்கோடச் செய்ததாம். இந்த யுத்தத்திலே மாண்ட ஜப்பானியர்தொகை 10,000 பேர் என மதிப்பிடப்படுகின்றது.

### ஹிட்லருடையசமாதானப் பேச்சின் சாரம்

(1) ஜர்மனியருக்குரிய நாடுகளில் எல்லைப்புற விவகாரங்களைத் தீர்க்கமாக ஒழுங்கு செய்துவிடல் வேண்டும்.

(2) ஜர்மனியபரிபாலனத்திலுள்ள நாடுகளில் வசிக்கும் ஜர்மனியரல்லாச் சாதியாரின் விவகாரங்களை வரையறுத்துச் சீர்ப்படுத்தி விடுதல் வேண்டும்.

(3) யூதருடைய விஷயத்தையும் ஒருவாறு ஒழுங்கு செய்து விடுதல் வேண்டும்.

(4) சகல நாடுகளுடனும் வியாபாரத்தை முந்தியிருந்தபடியே நடக்கும்படி பரஸ்பரம் நிபந்தனைகளை ஆக்குதல் வேண்டும்.

(5) போலண்டிலும் அச்சாதியினருக்கு ஆகிய ஒரு இராச்சியத்தை நிர்வகித்துக் கொடுத்தல்வேண்டும். அந்த ராச்சியம் ஒருபக்கத்திலுஞ் சேராமல் பொதுவாக நிற்கும் விஷயத்திற்கு ருஷியரும் ஜர்மனியருமேபொறுப்பாக நிற்றல் வேண்டும்.

இந்தச் சமாதான நிபந்தனைகளைப் பிருத்தானிய யுத்த மந்திரியாகிய மிஸ்ரர் சேர்ஜில் ஏற்றுக்கொள்ள மறுப்பாரேயானால் இதுதான் கடைசி முறையாக ஏதுஞ் சொல்வதாக இருக்கும். பிருத்தானியரே வெற்றியடைவரென மிஸ்ரர் ஜேர்ஜில் நம்பியிருக்கக்கூடும். ஆனால் இற்றில் ஜர்மனியே வெற்றியடையுமெனபதில் எனக்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை.

எங்களுடைய குடியேற்ற நாடுகளைப்பற்றிச் சொல்லுகில் "எங்களிடத்திலே திருட்டுத்தனமாக அபகரித்த எங்கள் குடியேற்றநாடுகளைத் திருப்பித் தரவேண்டுமென்று நாங்கள் கேட்பதால் எங்களை எவரும் குறை சொல்லமாட்டார்கள்; நான் எங்கள் குடியேற்ற நாடுகளைத் திருப்பித்தரல் வேண்டுமென ஒருபோதும் இரந்து கேட்கப்போவதில்லை.

போலண்டு விஷயமாக ஹிட்லர் பின்வருமாறு கூறினர்:- "போலண்டின் தலைநகரமாகிய உவார்ஸோவை எங்கள் படை கைப்பற்றுவதற்கு முந்தி, அப் பட்டினத்திலுள்ள சனங்களைப் பட்டினத்தைவிட்டு அகற்றிவிடும்படி நான் போலிஷ்சேனாபதிக்குத் தெரிவித்தேன்; அதனைக் கொண்ட அந்தச் சேனாபதி என் சொல்லைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அதனால் அப்பட்டினத்தை எங்கள் சைநியம் அழிக்கவேண்டி ஏற்பட்டது. ஆனதால் அந்தப் பாதகம் என்னைப் பொறுத்ததல்ல. போலண்டு யுத்தத்தில் மாண்ட ஜர்மனிய போர்வீரரின் தொகை 10572: காயமடைந்தவர்களின் தொகை 30222; இன்னதியானுமென அறியப்படாமலிருக்கும் வீரர்களின்தொகை 3400 ஆகும். போலண்டு வீரர்களுள் 649000 பேர் சிறைப்படுத்தப்பட்டு பெர்லின் நகருக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள்.

1918ம் ஆண்டில் எங்கள் பகைவரால் விதிக்கப்பட்ட வேர்ஸெயில்ஸ் உடம்படிக்கையை இல்லாதழித்துவிடுவேன் என எனது ஜர்மனிய சனங்களுக்கு நான் வாக்குச் செய்திருந்தேன்; இப்பொழுது அப்படியே செய்துவிட்டேன்; அந்த உடம்படிக்கையின்படி முளைத்த போலண்ட் அழிந்தது: இனிமேல் முந்தியபடி முளைத்து வளர்வது முடியாதகாரியம்."

——

# கந்தரடைடன் கூந்தல் தைலம்

கூந்தலுக்குச் சிறந்த கோலத்தையும் பலத்தையும் அளிப்பது

தவஸ அசடுகளைப் போக்குவதிலும், கூந்தலை மென்மையாக்குவதிலும் காலமல்லாத காலத்தில் உண்டாகும் நரையையும் கூந்தலிலும் உச்சித்தோலிலும் உள்ள மற்றைய நோய்களையும் மாற்றுவதிலும் சித்திகரமானது



பெங்கால் கெமிக்கல்

கல்கத்தா பம்பாய்

ஏஜென்ஸ்: தேவர் அன் கொம்பனி மெயின் ஸ்ரீட் கொழும்பு

Mis 159. 10-9-37


# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டவோச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு ராம. அள. ராம. ராமநு செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த லேலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| நம | உ. | ரூபா ச | பெயர் — நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| 1937-ம் ஆண்டு 8-ம் மாசம் | | | |
| 987 | 28 | 02 | சண்டிக்குளி ஆ எலியாஸ் டிம்மியுடன் திருகில்லாத சிவு கம்பிப் பூராணட்டியல 1 |
| 1937-ம் ஆண்டு 9-ம் மாசம் | | | |
| 1013 | 4 | 19 50 | காவாக் துறை ம தம்பிராசா கல்விழுந்த இமி கல் கவுத்தோர் 1 |
| 1938-ம் ஆண்டு 6-ம் மாசம் | | | |
| 2366 | 5 | 60 | வண்மேற்கு ஆ சி மயில்வாகனம் பி வி விலாசம் போட்ட செடிகாரம் 1 |
| 2373 | 7 | 60 | அச்சுவேலி சி ராஜா பின்முகப்புடன் இரட்டைப்பட்டுச்சங்கிலி 1 |
| 2376 | 7 | 17 | வண்மேற்கு கா செல்லத்துரை இமி கல் கடுக்கன் சோடி 1 சிறு பெட்டி மோதிரம் 1 |
| 2377 | 8 | 55 | காவாக்துறை த ராஜதுரை சங்கிலி அட்டியல் 1 |
| 2383 | 8 | 15 | வண்மேற்கு கா சுந்தரமாசாரி காலடியில்லாத செம்பு சாட்டைக் காப்பு சோடி 1 |
| 2418 | 15 | 10 | சண்டிக்குளி ஆ எலியாஸ் இமிகல் தோடு சோடி 1 |
| 2426 | 16 | 12 | வண்மேற்கு ஆ சி மயில்வாகனம் இமி கல் சிலேட் 1 |
| 2443 | 18 | 250 | சண்டிக்குளி ஆ எலியாஸ் கல்விழுந்த இமி கல் செடி தருசமூன்றுடன் பின் திருகுசுரையில்லாத காலுபட்டைச் சங்கிலிக் கொடி 1 |
| 2449 | 19 | 100 | சோனகதெரு மு அப்துல்காதர் இள பொன் சவுடியுடன் பழுது சங்கிலிக் கொடி 1 |
| 2462 | 21 | 9 | வீரமாகாளியம்மன் கோவிலடி செ ரெத்தினம் இமி சிறு நீலக் கல் மோதிரம் 1 |
| 2502 | 28 | 17 | வண்கிழக்கு வ செல்லப்பா ஒன்றக்குத் திருகில்லாத இள பழுது மழுக்கன் கல் சாதோலை சோடி 1க்கு அரக்கு |
| 2510 | 29 | 110 | வண்கிழக்கு சி செல்லப்பா இமி கல் பழுது பதக்கத்துடன் முரிச்சக்குத்தி அட்டியல் 1 |
| 2516 | 30 | 28 | காவாக்துறை த ராஜதுரை கைச்சங்கிலி சோடி 1 |
| 1938-ம் ஆண்டு 7-ம் மாசம் | | | |
| 2555 | 6 | 55 | சோனகதெரு எஸ் கச்சுமுகம்மது திருகில்லாதசங்கிலியட்டியல் 1 |
| 2577 | 8 | 40 | வெள்ளாச்செரு வ சபாரெத்தினம் பழுதுகாதோலை சோடி ஒன்றும் திருகில்லாத வெடி கல் கடுக்கன் சோடி ஒன்றும் மழுக்கன்கல் சாதோலை சோடி 1 |
| 2628 | 16 | 150 | வண்கிழக்கு க ஆறுமுகம் குண்டுச்சங்கிலி 1 |
| 2643 | 16 | 105 | சில்லாலை தீ அந்தோனிப்பிள்ளை கெட்டிக் காப்பு சோடி 1 சிவு பின்னைக்காப்பு சோடி 1 |
| 2644 | 16 | 150 | ஆஸ்பத்திரிரோட் மி வெலிச்சோர் இமி கல் பழுது பதைக்கத்துடன் செட்டிப்பூராணட்டியல் 1 பழுது பதைக்கம் 1 |
| 2645 | 16 | 235 | ஆஸ்பத்திரிரோட் மி வெலிச்சோர் கல் விழுந்த செடிவேலை செய்த முழுட்லருடன் இரட்டைப்பட்டுக் குண்டுச்சங்கிலி 1 |
| 2722 | 24 | 10 | காவாக்துறை அ செல்வராயகம் திருகில்லாத இமிகல் தோடு சோடி 1 |
| 2727 | 25 | 71 | வட்டுக்கோட்டை ஆ குமாரவேலுப்பிள்ளை இமிகல் முகப்புடன் அச்சுக்காப்பு சோடி 1 |
| 2736 | 27 | 225 | அச்சியடி க சுப்பிரமணியம் பின் திருகுசுரையில்லாத சிவுமுரிச்சுக்குத்திக் கொடி 1 |
| 2752 | 30 | 145 | மானிப்பாய் அ சுப்பிரமணியம் இரண்டு குண்டு தடை ஒன்றுடன் முரிச்சுக்குத்திக் கொடி 1 |
| 1938-ம் ஆண்டு 8-ம் மாசம் | | | |
| 2804 | 5 | 140 | அளவெட்டி என் முத்துச்சாமி டைமன் அட்டியல் 1 திருகுசுரையில்லாத ஒடிந்த மினகு காப்பு சோடி 1 பஞ்சாயுதம் ஒன்று கோர்த்த சிறுவெர்தயச் சங்கிலி 1 |
| 2812 | 6 | 10 | சண்டிக்குளி ஆ எலியாஸ் இமிகல் மோதிரம் 1 |
| 2814 | 6 | 10 | சண்டிக்குளி ஆ எலியாஸ் இமிகல் மோதிரம் 1 |
| 2832 | 10 | 29 | மானிப்பாய் ம கந்தவனம் பழுது அச்சாக்கூடு 2 |
| 2845 | 13 | 151 | சிறுப்புட்டி ச சுந்திரவேலு பின் முகப்பில்லாத முறிச்சுக்குத்திக் கொடி 1 |
| 28*2 | 14 | 20 | சண்டிக்குளி ஆ எலியாஸ் இமி கல் ஒத்தை முடிச்சு மோதிரம் 1 அரும்புத்தடை 2 சாதாத்தடை 1 |
| 2862 | 16 | 10 | மாவிட்டபுரம் வே ஆறுமுகம் இமிகல் மோதிரம் 1 |
| 2872 | 18 | 150 | மாவிட்டபுரம் கா கந்தையா செட்டிக்காப்பு சோடி 1 |
| 2874 | 18 | 8 | அச்சுவேலி சி காகமணி தாலி 1 பழுது |
| 2890 | 21 | 25 | சோனகதெரு என் கச்சுமுகம்மது இள பொன் சில்லறை உருப்படி 14 |
| 2897 | 22 | 50 | காவாக்துறை ம தம்பிராஜா கல்விழுந்த இமிகல் பென்டனுடன் சங்கிலி அட்டியல் 1 |
| 2899 | 23 | 50 | இணுவில் வே கந்தையா தகட்டுக்காப்பு சோடி 1 |
| 2941 | 29 | 110 | அச்சுவேலி த இரத்தினம் இமிகல் பதக்கத்துடன் செட்டிப் பூராணட்டியல் 1 |
| 2951 | 31 | 67 | இணுவில் வே கந்தையா கைச்சங்கிலி 1 |
| 2631 | 16 | 88 80 | வண்கிழக்கு க ஆறுமுகம் இமி கல் பென்டனுடன் சங்கிலி அட்டியல் 1 |

விற்பனவு நிகழும் பிரமாதி வருஷம் ஐப்பசி மாதம் 9-ந் தேதி (26-10-39) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டவை பிறகிலகலாக மிருதி மேற்படியார் கடையில் பிரசித்த லேலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்தின்மேன்தர்.

Mis. 126 5 & 9.10-39


# யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,36700

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் சட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த சேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாளுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக் கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்.

Y47. 21-11-38—20-11-39

இங்.



## கோப்பாயிற் பொல்லடி

### வயோதிக எதிரிக்கு அபராதமும் கோடு முடியும்வரை மறியலும்

5-10-39

கோப்பாயில் வசிக்கும் முருகர் வாரித்தம்பி யென்னும் வயதில் முதிர்ந்தவர் அவ்வூர்க் கந்தன் முருகேசு யென்னும் வயோதிகரை ஒரு பொல்லாலடித்துக் கடுங்காய முண்டாக்கிய தாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ்நீதிபதி திரு. E. V. R. சமரவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின் பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு எதிரிக்குக் கோடு முடியும்வரை மறியலும் நாற்பது ரூபா அபராதமும் இறுக்கும்படி கூறினர். அவர் தீர்ப்புக் கூறுகையில் இச் சண்டை சடுதியாக மூண்டமையாலும் வழக்காளியும் எதிரியும் வயதில முதிர்ந்தவர்களாகையாலும், என்னவாயிருந்தபோதிலும் எதிரியே இதைத் தூண்டிவிட்டதாய்ச் சாட்சிகளிலிருந்து தெரியப்படுவதாலும் எதிரிக்கு இத் தண்டனையை விதிக்கிறேனெனக் கூறினர். ந. கி.


# கேரள வெப் சோப்




சருமத்திற்கு உற்சாகம் விளைக்கக் கூடிய உயர்தரமானது

அழகான பெண்களுக்குரிய சோப்

எங்கும் கிடைக்கும்

ஏஜென்ஸ்: தேவார் அன் கம்பனி, மெயின் ஸ்ரீட், கொழும்பு

Mis 159, 71-11-38—


## விமாத்திராத கார்

### கோட்டில் நீதிபதியின் எச்சரிக்கை

6-10-39.

இன்று யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில 'லைசென்ஸ்' எடுக்காத கார்க்காரர்களில் அநேகர் குற்றஞ்சாட்டப்பட்டபோது, சிலர் குற்றத்தை ஒப்புக்கொண்டு பணம் கட்டச் சம்மதித்தனர். ஆயின், சிலர் குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்தனர். இவர்களுட் சிலர் தங்கள் காரை விமாத்திராத படியால் 'லைசென்ஸ்' எடுக்கத் தவறிவிட்டதாக அறியவந்த நீதிபதி "விமாத் திராத கார்கள் ரோட்டில் ஓடினல், நான் அவைகள்மீது மிகவும் கடுமையாக இருக்க நினைத்திருக்கிறேன். அபராதமாக ரூபா 50 தொடக்கம் ரூபா 500 வரையிலும் தெண்டம் விதிக்க எண்ணி இருக்கிறேன். ஆகையால், விமாத் திராத கார்க்காரர்களை ரோட்டிற்கு எடுக்கவே கூடாது" எனக் கூறினர். ந. கி.

# தலைவர்கள் - வைஸ்ராய் சந்திப்பு

## இரண்டேகால்மணிநேரம் சம்பாஷணை

### காந்திஜியையுங் காண்பார்

புதிய டில்லி, அக, 3— காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத்தும் யுத்த கமிட்டிச் சபைத் தலைவர் பண்டிதர் ஜவஹர்லாலும் இன்று 2½ மணி நேரம் இராஜப் பிரதிநிதியுடன் சம்பாஷித்து விட்டுப் பகல் 1-5க்கு ஸ்ரீமாக். பிர்லாவின் அழகிய மோட்டாரில் இராஜப்பிரதிநிதி மாளிகையை விட்டு வெளியே வந்தனர். வெளியிலிருந்த காங்கிரஸ் தொண்டர்கள் சிலர் அவர்களைக் கண்டதும், சந்தோஷ ஆரவாரஞ் செய்தனர். தலைவர்களிருவரும் புன்சிரிப்போடு கோராகப் பிர்லாவின் பங்களாவுக்குச் சென்றுவிட்டனர். அங்கு மகாத்மாவிடம் தாங்கள் இராஜப் பிரதிநிதியிடம் பேசிய விவரங்களை அறிவிப்பார்கள். வைஸ்ராய் இவர்களை மீண்டும் அழைப்பாரா அழைக்கமாட்டாரா என்பது இப்போது தெரியவில்லை.

இன்று காலை காங்கிரஸ் கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையை முடிவாகத் திட்டப்படுத்திக்கொண்டு அதன் பின்னரே தலைவர்களிருவரும் வைஸ்ராய் மாளிகைக்குச் சென்றனர். வைஸ்ராய் மீண்டும் மகாத்மாவை இரண்டொரு தினங்களில் அழைத்துப் பேசுவார் என்றுந் தெரிகிறது. அப்போது தலைவர்களைக் கலந்து பேசியமை சம்பந்தமாக ஏற்பட்ட முடிவை விண்டித்தோ பிரபு அவரிடம் அறிவித்தாலும் அறிவிப்பார்.

### சம்பாஷணையின் பயன்

இந்தச் சம்பாஷணையின் பயன் என்னவாகும் என இப்போது சொல்லமுடியாது. காந்திஜியுஞ் சரி வைஸ்ராயுஞ்சரி, காங்கிரஸுக்கும், அரசாங்கத்துக்கும் இந்தச் சமயத்தில் தகராறு ஏற்படவேண்டுமென விரும்பவில்லை. இன்னும் இரண்டு தினங்களிற் பல விஷயங்கள் தெளிவாகிவிடும். வார்தாவிற் காரிய நிருவாகசபை 7-ந் திகதி கூடித் திட்டமாக யுத்த சம்பந்தமாகத் தனது கொள்கையை வெளியிட்டு விடும். தலைவர்கள் இங்கிருந்து புறப்படுமுன், அகில இந்தியக் காங்கிரஸ் நிருவாக சபை கூடும் தினத்தை அறிவித்துவிடுவார்கள். ஜவஹர் வார்தாவுக்குப் போகுமுன் அலகபாத்துக்குச் சென்று திரும்புவார் எனத் தெரிகிறது.

### ஒன்றும் கேட்காதீர்கள்

இராஜப்பிரதிநிதி மாளிகையிலிருந்து தலைவர்கள் இருவரும் திரும்பியதும், சாந்திஜியுடன் சற்றுநேரம் பேசிவிட்டுச் சாப்பாட்டுக்குச் சென்றனர்.

"மீண்டும் இராஜப்பிரதிநிதியைப் பார்க்கப் போகிறீர்களா? சம்பாஷணையில் திருப்தி ஏற்பட்டதா? என அசோஸியேற்றற் பிரஸ் நிருபர் கேட்டதற்கு இராஜேந்திர பாபு "என்னை ஒன்றும் கேட்காதீர்கள்; இப்போது ஒன்றுஞ் சொல்லமுடியாது" எனக் கூறிவிட்டார்.

இன்று மாலை மீண்டும் யுத்தகமிட்டிச் சபைக்கூட்டம் நடக்கும், அப்போது இராஜப்பிரதிநிதியுடன் இரு தலைவர்களும் நடத்திய சம்பாஷணை சம்பந்தமாக ஆலோசனை நடக்கும்.

---

### யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

## புத்தகப் புதுவிலைக் குறிப்பு

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| 1 | சிறபிள்ளைப்பாடம் (சித்திரசஹ) | | 18 |
| 2 | முதற் பாலபாடம் ,, | | 12 |
| 3 | இரண்டாம் பாலபாடம் ,, | | 25 |
| 4 | மூன்றாம் பாலபாடம் ,, | | 30 |
| 5 | நான்காம் பாலபாடம் ,, | | 46 |
| 6 | ஐந்தாம் பாலபாடம் ,, | | 50 |
| 7 | ஆறாம் பாலபாடம் ,, | | 60 |
| 8 | ஏழாம் பாலபாடம் ,, | | 70 |
| 9 | எட்டாம் பாலபாடம் ,, | | 85 |
| 10 | செந்தமிழ் வாசகமஞ்சரி (புதிய பதிப்பு) | | 45 |
| 11 | சைவத்திருநெறித் தோத்திரத் திரட்டு | | 35 |
| 12 | சைவபோதம் முதலாம் புத்தகம் | | 30 |
| 13 | ,, இரண்டாம் ,, | | 45 |
| 14 | (சைவபோதம் மூன்றாம் புத்தகம்) திருவருட்பயன் | | 45 |
| 15 | சைவெஸ் பாலவிசிக்குகாண்டம் | | 65 |
| 16 | திருக்குறள் (முதல் 20அதிகாரம்) | | 80 |
| 17 | திருக்குறள் (முதல் 39 அதிகாரம்) (கிளேஸ்) | 1 | 35 |
| | ,, ,, (நல்) | 1 | 10 |
| 18 | கிருட்டிணன் தூது, உரையுடன் | 1 | 10 |
| 19 | கல்வளை யந்தாதி ,, | | 60 |
| 20 | தஞ்சைவாணன்கோவை விரிவுரை (கலிக்கோ) | 3 | 75 |
| | ,, ,, (சாதா) | 3 | 25 |
| 21 | சைவக்கிரியை விளக்கம் | | 30 |
| 22 | நமச்சிவாயமாலை உரையுடன் | | 6 |
| 23 | ஆத்திசூடி ,, | | 5 |
| 24 | கொன்றைவேந்தன் ,, | | 5 |
| 25 | வெற்றிவேற்கை ,, | | 6 |
| 26 | வாக்குண்டாம் ,, | | 6 |
| 27 | நல்வழி ,, | | 6 |
| 28 | நன்னெறி ,, | | 6 |
| 29 | மறைசை யந்தாதி ,, | | 35 |
| 30 | இனியவை நாற்பது, (ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | | 15 |
| 31 | சோமவாரவிரத மான்மியம் | | 18 |
| 32 | கந்தவிரத மான்மியம் | | 12 |
| 33 | சிவபூசைத்திரட்டு(புதியபதிப்பு) | | 18 |
| 34 | திருச்செந்தூர்ப் புராணம் (கிளேஸ்) | 1 | 35 |
| | ,, (நல்) | 1 | 10 |
| 35 | கந்தரலங்காரம் கந்தரனுபூதி | | 12 |
| 36 | கந்தசஷ்டி கவசம் | | 5 |
| 37 | சுப்பிரமணியசுவாமி விருத்தம் | | 5 |
| 38 | ஆறுமுகசுவாமி விருத்தம் | | 5 |
| 39 | பிள்ளையார்கதை | | 15 |
| 40 | கதிரமலைப் பேரின்பக்காதல் | | 15 |
| 41 | இந்துசமயி தாவரசிவியா விருத்தவேலன் | | 12 |
| 42 | சாவித்திரி சரித்திரம் | | 10 |
| 43 | குமண சரித்திரம் | | 10 |
| 44 | பஞ்சரத்தினத் திருப்புகழ் | | 5 |
| 45 | சிகல்ஷ பதினோராவதும் பன்னிரண்டாவதும் | | 30 |
| 46 | தையல்நாயகி கலிவெண்பா | | 5 |
| 47 | தமிழ் எழுத்துறுப்புப் புத்தகம் (1—6) | | 8 |
| 48 | தினசரி பாடக் குறிப்பு பாலர் கீழ்ப்பிரிவு—5 வகுப்பு | | 25 |
| 49 | தினசரி பாடக்குறிப்பு 6—S. S. C. | | 25 |
| 50 | பள்ளிக்கூடத் தினவரவுடாப்பு | | 35 |
| 51 | உபாத்திமார் வரவு டாப்பு | | 10 |
| 52 | கந்தபுராணம் சுரமிபடலம் | | 60 |
| 53 | முத்திசாதனம் | 1 | 25 |

* இப்பொழுது நிகழும் யுத்தகாரணமாகக் கடதாசிப் பஞ்சம் சேர்ந்தமையினால், சமயோசிதமாகப் புத்தகங்களின் விலை சிறிது உயர்த்தப்பட்டது.

வண்ணார்பண்ணை 25-9-39 மனேஜர்.

**இங்கே சபையார் அச்சிட்டவைகளன்றி ஏனைய புத்தகங்கள் விலைக்குக் கிடையா.**

---

### யுத்த சமாச்சார வியாக்கியானங்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

சையும் நாங்கள் நினைக்கவேண்டும். அவர்களுடைய ஒற்றுமை மனப்பூர்வமானதல்ல. தங்கள் தங்கள் அவசர காரியங்களின் சித்தியைப் பற்றிய ஆலோசனைகளை அவர்கள் உறவாடச்செய்திருக்கின்றன. ஆனால் ஜேர்மனி நன்றாகச் செழித்தோங்குவதை ஸ்டாலின் விரும்பமாட்டார். அன்றியும் ஜேர்மனியிலே சமத்துவக் கொள்கை பரவுதல் ஹிற்லருடைய ஆட்சியைப் பெலப்பிக்கவுமாட்டாது. ஒருவேளை இந்த யுத்தத்தினாலே ஜேர்மனியிலே பெரும் புரட்சி ஏற்படக்கூடுமெனவும், அதன்மூலமாக அங்கே சமத்துவக் கொள்கையை வளர்க்கலாமெனவும் ருஷியா எண்ணிக்கொண்டிருப்பதாகப் பலரும் நினைக்கிறார்கள். அன்றியும் இப்பொழுது ருஷியாவிடம் பெற்ற உதவிக்குப் போலந்தின் பெரும்பாகத்தைக் கொடுக்கவேண்டி நேரிட்டது. ருஷிய உதவியை இதுபோலப் பெரும் விலைக்குத்தான் இனிமேலும் பெறவேண்டி வரும். ஆகையினாலே இந்தப் புதிய சிநேகிதம் ஜேர்மனியின் நன்மைக்குப் பெருஞ் சாதகமாக இல்லை.

4. போலந்தைக் கைப்பற்றிய வெற்றியினாலாவது ருஷியாவோடு செய்த ஒப்பந்தத்தினாலாவது ஜேர்மனியினுடைய சிக்கல்முறை திருந்திவிடவில்லை. போலந்திலே தனது சொந்த உரிமையாக்க விரும்பிய கோதுமையும் எண்ணெயும் ருஷியர் கைவசம் போய்விட்டன. தரையாக்கமாகச் செய்யும் உள்ளூர்ப் போக்குவரவுகளுக்கு சேர்ந்திருக்கும் பல வசதியீனங்களினாலே, ஜேர்மன் கைத்தொழிலுக்குக் கொடுப்பதாக வாக்களித்த பெருந்தொகை மூலப்பொருள்களை ருஷியா கொடுக்கும் போலத் தெரியவில்லை. அன்றியும் தன்னுடைய உள்ளூர்த் தேவைகளுக்ுக் கண்டு மிஞ்சத்தக்கதாக ருஷியா மூலப் பொருள்களை விருத்தி செய்யவுமில்லை. உதாரணமாக வருஷா வருஷம் Petrol மண்ணெண்ணெய் 160 முதல் 180லட்சம் தொன் வரையிலே ஜேர்மனிக்குத் தேவை. ஆனால் இதிலே 30 தொன் வரையிலேதான் ஜெர்மனி தனது நிலக்கரியிலிருந்து பெறுவது. இவ்வளவு காலமும் ருஷியாவினுடைய எண்ணெய் முழுவதும் ருஷியாவினுடைய உள்ளூர்த் தேவைக்குத்தான் போதியதாகவிருந்தது. இனி ஜேர்மனிக்குப் பெருந்தொகையாக அனுப்புவதற்கு ருஷியாவினால் இயலுமோ வென்பது சொல்லமுடியாது.

### மேற்கெல்லைப்புறம்

5. மேற்கெல்லைப்புறத்திலும் கடலிலும் ஜேர்மனியின் கெட்டித்தனத்தையும் கொள்ளையையும் அடக்கவேண்டும். மேற்கெல்லையிலே நேசக்கட்சியின் யுத்தம் இன்னும் சிறிது மந்தமாகத்தான் நடக்கிறது. ஆனாலும் அதனுடைய முன்னேற்றம் திருப்திகரமானது. பிரான்சுக்கு ஒருவிதமான அவசரமுமில்லை. ஹிற்லர் தான் அவசரப்படவோ அழியவேண்டியோ இருக்கிறது. பிரான்சுக்கு அவ்விதமான நிலையில்லை. பிரெஞ்சுச் சேனைகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கும் அவைகளை அகப்படுத்துவதற்கும் ஜேர்மனியர் நிலத்திலே வெடிகுண்டுகளையும் பொறிகளையும் வைத்திருக்கிறார்கள். அதனாலே நேசக்கட்சியின் சேனைகள் மிகவும் சாவதானத்துடன் மெதுவாகத்தான் செல்லவேண்டியிருக்கிறது எனினும் இதுவரையிலே அடைந்த காரியசித்தியைக் குறித்து நேசக்கட்சி அரசாங்கங்கள் திருப்தியீனப்பட நியாயமில்லை. மகினோட் அரணுக்கும் ஸீஜ்பிரீட் அரணுக்கும் இடையிலேயுள்ள ஒருவருக்கும் சொந்தமில்லாப் பகுதியிலே 50 ஊர்களைப் பிடித்திருக்கிறார்கள். அருப்புகளுக்கு விமானப் படைகள் நியாயமான உதவி செய்து வருகின்றன. ஜெர்மன் விமானப்படைகளை யெதிர்த்துப் பலமுறைகளிலும் புரிந்த போரிலே நேசக்கட்சிய வெற்றிபெற்றிருக்கிறது. செப்டெம்பர் 24ந் தேதிக்கும் 27ந் திகதிக்குமிடையிலே சத்துராதியின் விமானங்களுள் 8 விமானங்களைப் பிரெஞ்சு விமானங்கள் கீழே விழுத்தியிருக்கின்றன. செப்டெம்பர் மாதம் 25-ந் திகதி 'பிரிடிரிக்ஷேபன்' என்னுமிடத்திலுள்ள செப்பளின் நிலையத்தின்மீது குண்டுபொழிந்தது இன்னுமொரு கீர்த்தி வாய்ந்த அருஞ் செயலாகும். இராணுவ முறையிலே பார்க்கும்பொழுது விமானப்படைகள் மிகவும் அவசியமுள்ள முக்கியமான வேறு சேவைகளும் செய்திருக்கின்றன. ஜேர்மன் துருப்புகளுடைய ஒழுங்குகள் இவை இவை, அரண்களுடைய அரண்களின் பெலப்பான இடங்கள் இவை இவை, பெலவீனமான இடங்கள் இவை இவை, என்பவைகளைப் பற்றிய அரிய செய்திகளை ஸீஜ்பிரீட் அரண் மேலாக வேவுபார்த்துப் பறந்த விமானங்கள் அறிந்துகொண்டு வந்திருக்கின்றன. இது சார்பிரக்சன் என்னும் நகரத்தை முற்றுகையிட்டுத் தாக்குவதற்குத் தளகர்த்தர் கமேலினுக்குப் பெரும் உதவியாயிற்று. இந்தப் பக்கத்திலே சத்துராதியினுடைய நிலைகளைக் குலைத்துத் தளாக்கிவிட்டனர். அதனாலே சத்துராதி சார்பிரக்கனை விட்டோட நேரிட்டிருக்கிறது. உதவியின்றித் தனித்து விட்டார்கள். அவர்களாற் குண்டுகளை எதிர்க்க முடியவில்லை. இப்பொழுது அதே பகுதியிலே தென் கிழக்குப் பக்கமாகச் சிலமைல்களுக்கப்பாலுள்ள 'சுவிபிரக்கன்' என்னும் நகரத்தை நோக்கிக் குண்டுகள் பொழியப்படுகின்றன. இந்தப் பக்கத்திலே ஜெர்மானியருடைய இராணுவத் திறமை பிரெஞ்சுக்காரருடைய யுத்த முறைகளை யெதிர்த்துக் கொஞ்சமும் முன்னேறிக்கொள்ளவில்லை. 1914—1918ல் நடந்த உலக மகா யுத்தத்திலே கமேலின் தளகர்த்தர் ஜெர்மன் சேனைகளுடைய குறைகளை நன்றாகக் கண்டிருக்கிறார். ஜெர்மன் தலைவரைப் போலவே அவருடைய சேனாபதிகளுக்கும் ஒற்றிக் கவர்ந்து திடீரெனப் பெருகிய சேனைகளுடன் முற்றுகையிடும் முறைகளுண்டு என்பதையும் கமேலின் நன்றாக அறிந்துகொண்டார். பிரெஞ்சுத் துருப்புகளின் யுத்தம் இத்தாலியருடைய மனத்திலேநன்றாகப் பதிந்திருக்கிறது. ஸீஜ்பிரீட் அரண் விழுந்து விடுமென்றே அவர்கள் எண்ணுகிறார்கள். அந்த அரண் மிகவும் விரைவிலே விழுந்துவிடும். ஏனென்றால் அதைக் காத்துவருகிற போர்வீரர்களுடைய சீவிய நிலை மிகவும் கிர்ப்பந்தமானது. எப்படித்தான் ஹிற்லரும் வொன் புரோச்கிஷ் சேனாபதியும் பகட்டாக உற்சாகப்படுத்தினாலும் அவர்களுடைய நிலை மிகவும் மோசமானதே.

### கடற்சண்டை

6. யுத்தம் தொடங்கிய பின்பு முதன்முதலாக மூன்றியவாரம் திங்கட்கிழமைதான் போர்க் கப்பல்கள் காவற் கப்பல்கள், நாசகாரிக் கப்பல்கள், விமானந் தாங்கி, ஆகிய இவை

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் கோக்குவில் மேற்கு த. பொன்னையாபிள்ளை அவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

| நம். | தி. | ரூ. ச. | பெயரும் ஊரும். நகையின் விபரம். |
|---|---|---|---|
| | | | 1936ம் ஆண்டு மார்கழிமாசம் |
| 1063 | 14 | 16 | சுப்பையா நடராசா தாவடி சிகப்புக்கல் காதோலை சோடி 1 |
| | | | 1937ம் ஆண்டு மாசிமாசம் |
| 1442 | 2 | 9 | சுப்பர் வயித்திலிங்கம் கோக்குவில் மேற்கு தாலிக்காய் ஒன்று |
| 1597 | 21 | 17 | சுப்பையா நடராசா தாவடி சிகப்புக்கல் காதோலைசோடி ஒன்று |
| | | | பங்குனி மாசம் |
| 1665 | 1 | 69 | நாகன் மருதன் மாகியப்பிட்டி உள்கருந்துக் கோடி ஒன்று தாலி சன்னக்காயுடன் பின்கோர்க்கி ஒன்று அச்சாக்கூடு ஒன்று |
| 1740 | 13 | 130 | சண்முகம் கந்தையா கோக்குவில் மேற்கு இரட்டைப்பட்டுக் குண்டுச்சங்கிலி பதக்கத்துடன் |
| 1816 | 26 | 10 | கந்தன் தம்பன் தாவடி வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடிஒன்று |
| 1818 | 26 | 8 | சிகப்புக்கல் காதோலை சோடி ஒன்று ஐயன் கனகன் கோக்குவில் மேற்கு அச்சாக்கூடு 1 முடியில்லை |
| | | | ஆடிமாசம் |
| 2531 | 3 | 7 | நாகேந்திரி இராசையா தாவடி ஒற்றைக்கல் மோதிரம் ஒன்று |
| | | | ஐப்பசிமாசம் |
| 479 | 2 | 11 | சின்னையா குமாரசூரியர் கோக்குவில்மேற்கு சிகப்புக்கல் காதோலை சோடி ஒன்று |
| 545 | 13 | 91 | சண்முகம் முத்தையா கோக்குவில்மேற்கு முடிச்சுக்குத்திக்கோடி 1 |
| | | | கார்த்திகை மாசம் |
| 889 | 26 | 10 | தம்பாபிள்ளை பொன்னம்பலம் வண்மேற்கு கலாவரைமோதிர.1 |
| | | | மார்கழிமாசம் |
| 1007 | 11 | 30 | இளையவி சின்னப்பன் ஆனைக்கோட்டை குண்டு வைத்த அரைப்பவுண் இரண்டு அச்சாக்கூடு 2 |
| | | | 1938ம் ஆண்டு தைமாசம் |
| 1325 | 18 | 9 | வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை கோக்குவில்மேற்கு தாலிக்காய் ஒன்று |
| 1361 | 22 | 8 | பொன்னையா சுப்பிரமணியம் கோக்குவில் மேற்கு சிகப்புக்கல் காதோலை சோடி ஒன்று |
| | | | பங்குனிமாசம் |
| 1804 | 24 | 7 | சின்னப்பொடியன் தம்பித்துரை கோக்குவில்மேற்கு பெரிய கடுக்கன் சோடி ஒன்று |
| | | | சித்திரை மாசம் |
| 1866 | 3 | 7 | பொன்னையா பெண் இராசம்மா கோக்குவில் மேற்கு சிகப்புக்கல் காதோலை சோடி ஒன்று |
| 1988 | 20 | 16 | தம்பையா அப்பையா கோக்குவில் மேற்கு வெள்ளைக்கல் புறேர் 1 |
| 2009 | 21 | 24 | சின்னத்தம்பி கைம்பெண் சிதம்பரம் கோக்குவில் மேற்கு சிகப்புக்கல்காதோலை சோடி ஒன்று |
| | | | வைகாசிமாசம் |
| 2174 | 13 | 9 | சரவணமுத்து சுப்பையா கோக்குவில்மேற்கு ஒற்றைக்காப்பு காவடியில்லாமல் |
| 2234 | 21 | 32 | வேலுப்பிள்ளை தில்லையம்பலம் கோக்குவில் மேற்கு சங்கிலி அட்டியல் ஒன்று பென்டனுடன் |
| | | | ஆனிமாசம் |
| 2362 | 8 | 10 | சின்னத்தம்பி முத்தையா தாவடி சிகப்புக்கல் காதோலைசோடி 1 |
| 2363 | 8 | 9 | சின்னையா ஆசைப்பிள்ளை கோக்குவில் மேற்கு பெரிய கடுக்கன் சோடி ஒன்று |

விற்பனவு நிகழும் பிரமாதிவருஷம் ஐப்பசிமாசம் 5ந் திகதுக்குச் சரியான (22-10-39) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டநகை பிறநீங்கலாக மிததி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மு. சிவசிதம்பரம்பிள்ளை உடையார்,
வேந்திஸ்மேஸ்தர்.

(Mis. 164, 9 & 12-10-39.)

---

## கல்வியங்காட்டில் திருட்டு

6-10-39

கல்வியங்காட்டைச் சேர்ந்த V. தம்பு என்பவருடைய ரூபா 364 50 சதம் பெறுமதியான நகைகளையும் வேறு சாமான்களையும் அவருடைய வேலைக்காரனாகிய A. செல்லப்பா வென்னும் இந்தியன் ஏகாம்பரம் பெண் பார்வதியின் தூண்டுதலைக் கொண்டு திருடியதாயும் இத்தகவல் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுப் பொலிசார் மேற்கூறிய இருவர் மீதும் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தார்களெனவு மறிகிறோம்.

(நமது நிருபர்)

## "புகைரதப் பிரயாணச் சீட்டுக்களைக் காணோம்

அனிசாவளைப் புகைரதநிலயத்தில் நடந்த சம்பவம்

அவிசாவளை ஸ்டேஷன் மாஸ்டர், பிரயாணச் சீட்டுக்களைத் தட்டில் திரும்ப அடுக்கி வைக்கும்போது அந்தப் புகைரத நிலயத்துக்கும் உதவக்கூடிய 220 "பிளாங்" பிரயாணச் சீட்டுக்கள் காணாமற் போயிருப்பதை அவதானித்தார்.

இது விஷயம் புகைரதப் பகுதி அக்கவுண்டனுக்கு அறிவிக்கப்பட்டது. ஆகவே, கணக்குப் பரிசோதனை உத்தியோகஸ்தர்கள் உடனே குறித்த ஸ்டேஷனுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது. ஆயினும் காணாமற் போன பிரயாணச் சீட்டுக்கள் உபயோகிக்கப்படுகின்றனவா என்பது பற்றி ஜாக்கிரதையாகக் கவனிக்கும்படி சகல புகைரத நிலயங்களுக்கும் அறிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. காணாமற்போன பிரயாணச் சீட்டுக்களின இலக்கங்கள் தெரியுமெனக் கூறப்படுகிறது.

## நவாலியிற் கார்விபத்து

### கோட்டிற் கார்ச்சாரதி

6-10-39

நவாலியில் வசிக்கும் ஒரு வயோதிகமாதை யாரோ கார்க்காரர் தட்டி வீழ்த்தியதினிமித்தமாய் ஆஸ்பத்திரியில் அவன் இறந்ததாயும் இச்சம்பவத்தைப் பொலிசார் விசாரணை செய்வதாயுஞ் சென்ற பத்திரிகையில வெளியிட்டுள்ளோம். இது சம்பந்தமாகச் சங்கானைப் பொலிஸ் உதவிச் சுப்பிரின்டென்டன் மானிப்பாயில் வசிக்கும் டிறைவர் குருசு அமுகசெத்தினமென்பவரை யாழ்ப்பாணம் நீதிபதி திரு E. V. R. சமரவிக்கிரம முன்னிலையிற் கொண்டு வந்து இறந்தி இவனை விளக்க மறியலில் வைக்கிறதற்குக் கட்டளை தரும்படி கோரினர். மேலும் தீதவான இதுசம்பந்தமாக விசாரணை செய்து கூடிய சீக்கிரத்தில் முடிக்கக் கூடுமென்றும் கூறினர். நீதிபதி அவனை விளக்கமறியலில் இருக்கும்படி கட்டளை இட்டார்.

ந-நி

## பிரிட்டனுக்குக் காந்திஜீயின் செய்தி

### பிரிட்டனுக்கு இது முதலாவது பரீக்ஷை

புதிய டில்லி, அக், 4—

நேற்றிரவு மகாத்மா மாஞ்செஸ்டர் கார்டியனின் இந்திய நிருபர் தம்மைக் கண்டு பேசியபோது அவர் மூலமாகப் பின்வருமாறு ஒருசெய்தி பிருத்தானிய மகா ஜனங்களுக்கு அனுப்பியிருக்கிறார்:—

பிரிட்டன் யுத்த ஆரம்பத்தில் ஜனநாயக சம்பந்தமாக அளித்த உறுதியை நிறைவேற்றுமா என்ற முதற் பரீக்ஷை நடக்கிறது. இப்போதே பிரிட்டன் தவறிவிட்டால் அது பெரும் பாதகமாகும். அவர்கள் அளித்த வாக்குறுதியில் இந்தியரின் பூரண சுதந்திர விஷயம் இந்தேசத்தினர் விருப்பப்படி அடங்கியிருக்கிறதா இல்லையா என்பது தெரியவேண்டும். இது ஒரு சாதாரணமான கேள்வி. இவ்விதம் கேட்பதற்குக் காங்கிரஸுக்கு உரிமையிருக்கிறது. காங்கிரஸும் கிரேட் பிரிட்டனின் க்ஷேமத்தைக் கோருபவர்களும் விரும்புவது போலப் பிரிட்டன் பதில் அளிக்குமெனவும் நம்பியிருக்கிறேன்.

## மனிதனிடந்தான் சக்தி இருக்கிறது

### நற்குணம் வாய்ந்த 40 கோடி இந்தியர்

### ஐரோப்பிய மிருகத்தனத்தை மாய்க்க முடியும்

சென்னை அக் 5

மதுவிலக்கு அங்குரார்ப்பணம் சம்பந்தமாக வடாற்காடு ஜில்லாவிற் சுற்றுப் பிரயாணஞ் செய்துவிட்டுத் திரும்பிய சென்னைப் பிரதம மந்திரி ஸ்ரீமாக். இராஜகோபாலாச்சாரியார் அஸோஸியேற்றட்பிரஸ் நிருபருக்கு அளித்த பேட்டியில் ஐரோப்பிய நிலைமைபற்றிக் கூறுவதாவது.—

மேற்கொண்டு நடக்கப்போகும் காரியங்களின் ஒருசாரல் இப்பொழுது நமக்குப் புலப்படுகின்றது. எல்லாம் சரிவர நடக்குமானால், ஐரோப்பாவின் போக்கையே மாற்றி மிருக சக்தி வெற்றிபெற்று விட்டதாகக் கொக்கரித்து நிற்கும் அரக்கர்களின் கொடுமையை மாய்க்கத் தன்னால் முடியுமென்பதைக் காட்ட இந்தியாவுக்குச் சந்தர்ப்பம் ஏற்படும். ஆம். வாஸ்தவந்தான். இந்தியாவுக்குக் கடற்படை கிடையாது விமானப் படையுங்கிடையாது. தன்னுடையதென்று சொல்லிக் கொள்வதற்கு ஓர் இராணுவமும் அதற்குக் கிடையாது. எனினும், மேற்படி காரியத்தைப் பூர்த்தி செய்து வைக்க அதனால் முடியுமென்பது உண்மை. மேற்படி படைகளும் இராணுவமும் இல்லாவிட்டாலும் இந்தியாவில் நற்குணம் மிகுந்த நாற்பது கோடி ஆண்களும் பெண்களுமிருக்கிறார்கள். உண்மைச் சக்தி மனிதனிடத்தானிருக்கிறது. அவன் கையாளும் ஆயுதங்களிலல்ல. மனித சக்தியால் ஆகாதது என்ன இருக்கிறது?

#### "காந்திஜீ ஒரு மாடு"

"மகாத்மாகாந்தி நிபந்தனையின்றி பிரிட்டனுக்கு உதவலாம். தருமம் அதுவே என்கின்றார்.

"அவர் ஒரு நல்லமாடு. புல் இல்லாவிட்டாலும் வண்டியை இழுக்கும்."

"புல்போடாவிட்டாலும், மாடு இழுத்துச்செல்ல ஆயத்தமாக இருந்தாலும், புல் இல்லாமல் எத்தனை நாளைக்குப் பட்டினியாக இழுத்துச் செல்லும்?"

"புல் போட்டால், இன்னும் அதிக உற்சாகத்துடன் வண்டியை இழுத்துச் செல்லும்."

## தானவரவு

மானிப்பாயைச் சொனனவூராகக் கொண்டவரும், பிட்கத்தைத் தோட்டத்தில் ரீமேக்காராகக் கடமை பார்ப்பவருமாகிய ஸ்ரீ S. ஆறுமுகமவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 5-10-39ல செவ்வனே அவரது புதல்வன் ஸ்ரீ மகாலிங்கமவர்களால் செய்யப்பெற்றது. அத்தருணம் யா. சை. பரிபாலனசபைக்குத தானமாக வரித்தனுப்பிய ரூபா 1 பெற்றும்.

## மாமரத்திற் றூங்கிய பிரேதம்

### "விசாரணையின்மூலம் கொலை எனத் தெரிகிறது"

### இன்னுந் திருத்தக்கூடியதாகத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

திருநெல்வேலியில் ஒரு வெறும் வளவிலுள்ள மாமரத்தின் கொம்பரில் தூங்கிக் கொண்டிருந்தகொக்குவிலைச் சேர்ந்த முருகேசு தம்பையா என்னும் வயோதிகரின் பிரேதம் பரிசோதிக்கப்பட்டது. சடுதி மரண விசாரணைக்காரராகிய திரு. A. கந்தையா இன்னும் கிடைக்கும் தாவல்களைக் கொண்டு பின்னர்த் திருத்தக் கூடிய ஒரு தீர்ப்பைக் கூறினர்.

இறந்தவரின் ஒரு மகனாகிய தம்பையா வேலாயுதம்பிள்ளை கூறிய சாக்ஷியமாவது:—

"அக்டோபர் மாதம் 2-ந் திகதி காலை 6 மணியளவில் எனது தகப்பனர் என் வீட்டுக்கு வந்து சிறிது பணந்தரும்படி கேட்டார். நான் அவரிடம் 50 சதம் கொடுத்தேன். அவர் தாம் திருநெல்வேலியில் ஒருவரிடம் ஒரு எருதை விற்றதாகவும் அதைத் தன்னிடம் வாங்கியவர் காசு தாராமல் அலக்கழிக்கிறாரென்றும் கூறினர்.

அடுத்த நாள், திருநெல்வேலியிலுள்ள ஒரு வளவில் ஒரு மாமரத்தில் எனது தந்தையாரின் பிரேதம் தூங்குவதாகக் கொக்குவிலைச் சேர்ந்த கனகலிங்கமென்பவர் எனக்குத் தெரிவித்தார். நான் உடனே அவ்விடம் சென்றேன். யாரோ சிலர் என் தகப்பனாரை அடித்துக் கொன்றபின் மரத்தில் தூக்கியிருக்க வேண்டுமென்று நான் கருதுகின்றேன்."

பிரேதப் பரிசோதனையை நடத்திய சட்டவைத்திய உத்தியோகஸ்தர் டக்றர் C. குருசாமி பிரேதத்தின் தலையிலும் ஏனைய பாகங்களிலுமிருந்த காயங்களை விபரித்துக் கூறினர். அன்றியும் மரணம் மூச்சுத் திணறியமையால் ஏற்பட்டதாகவும் அபிப்பிராயந் தெரிவித்தார்.

மேலும், இரு சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டபின், விசாரணைக்காரர் பின்வருமாறு தீர்ப்புக் கூறினர்.

"யாரோ இறந்தவரை அடித்துக் கொன்றபின், மரத்திற்றூக்கியிருத்தல் வேண்டுமென்று சாக்ஷியத்திலிருந்து தெரிகிறது. ஆயின், அக்கிரமச்சியை நேரிற்கண்ட சாக்ஷிகள் இல்லாமையால், இன்னும் கிடைக்கும் தகவல்களைக் கொண்டு பின்னர்த் திருத்தக்கூடியதாகத் தீர்ப்பைக் கூறுகின்றேன்."

இறந்தவர் கொலை செய்யப்பட்டார் என்பதில் மரண விசாரணைக்காரரது தீர்ப்பு எவ்வித சந்தேகத்திற்கும் இடம் வைக்கவில்லை. இனி, கொலை செய்தோரைக் கண்டு பிடித்தல் பொலிசாரின் வேலையேயாகும். இதனை மிக்க ஊக்கத்தோடு பொலிசார் செய்வார் என்பது நிச்சயம். யாழ்ப்பாணத்தில் துப்பறியப்படாது கைவிடப்பட்ட பல பாரதூரமான கொலைகளைப்போல இதுவும் கைவிடப் படமாட்டாதென்று நம்புகிறோம்.

## தொழிலாளர்வருகைத் தடை

### தோட்டத் துரைமார் சங்கத்தின் தீர்மானம்

### மகாநாடு நடத்த ஆலோசனை

இலங்கைத்தோட்டத் துரைமாரின் சங்கப் பொதுநிருவாகசபையின் சென்ற கூட்டத்தின்போது, மிஸ்டர் ஜேம்ஸ் போபமாற் கொண்டுவரப்பட்ட பின்வரும் பிரேரணை மிஸ்டர் ஏ. ஏ. மெக்கெட்டால் ஆமோதிக்கப்பட்டபின், ஏகமனதாக நிறைவேற்றி வைக்கப்பட்டது.

"இந்தியா இலங்கை ஆகிய இரு தேசங்களுக்கிடையேயுமுள்ள தகராறுகள் அதி விசேஷமாக இந்தியத் தொழிலாளர்களின் வருகையைத் தடைசெய்வது பற்றிச் சமரஸமாக முடித்துக் கொள்வதற்குடனே ஒரு மகாநாடு கூட்டப்படவேண்டுமெனவும், அவ்விதஞ் செய்வதால் இலங்

வகைக்கு வருமானத்தைத் தரக்கூடிய தொழில்களுக்குப் பொருளாதாரக்கஷ்டத்தைத் தடுக்கமுடியுமெனவும், இத தொழிலாளிகளிடையேயுள்ள கஷ்டநஷ்டங்கள் அநேகமானவற்றை நிவிர்த்திசெய்துவிடலாமெனவும்இச்சபை கருதுகின்றது.

## அதிக விலைக்கு விற்றதாக வழக்கு

### எதிரிகள் விடுதலைசெய்யப் பட்டனர்

மருதானை டீன்ஸ் றோட்டைச் சேர்ந்த முறைறதீன் குப்பையும் செய்யது அபுதாஹீரும் செப்டம்பர் மாதம் 17-ந் திகதி மாசியில் நிர்ணயிக்கப்பட்ட விலை றாத்தல் ஒன்று 45 சதமாக இருக்க, 47 சதத்திற்கு விற்றார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சென்ற வெள்ளிக்கிழமை கொழும்பு தற்காலிக நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

புறக்கோட்டை 5-ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஈடோன் ஏபிரஹாம் அப்புஹாம் என்ற வியாபாரியும், மனேஜரான எல்டோன் வில்பர்ட்டும் அதிகப்படியான விலைக்கு அரிசி விற்றார்களென்று குற்றம் சாட்டப்பட்டிருந்த வழக்கு தொடர்ந்தேராரத் கைவிடப்பட்டது.

அதிகப்படியான விலைக்கு அரிசி விற்றாரென்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்த புறக்கோட்டை செக்ஜோன்ஸ் றோட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிள்ளை என்ற வியாபாரியும் நீதிபதியினால் விடுதலை செய்யப்பட்டார்.

## இந்தியாவுக்குச் சம அந்தஸ்து

### பாராளுமன்றத்தில் மேஜர் அட்லியின் வற்புறுத்தல்

லண்டன் அக் 3

பாராளுமன்றத்தில் மிஸ்டர் சேம்பர்லேனுக்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் மேஜர் அட்லி பேசும்போது, இந்தியாவுக்குச் சம அந்தஸ்து வழங்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டி இவ்வளவு காலதாமதத்திற்குப் பிறகாவது அரசாங்கத்தார் அந்நாட்டுக்குச் சமஅந்தஸ்து அளிக்க முன்வரவேண்டுமெனக் கூறினர்.

## யுத்த எதிரொலி

### வர்த்தக ஸ்தாபனக் கிளாக்குமாருக்கு வேலையின்றேல்

### அரசாங்கம் நிவாரணஞ் செய்யுமா?

யுத்தகாலத்தில் ஏற்படக்கூடிய சிக்கனமுறைகளின் விளைவாக, வர்த்தக ஸ்தாபனங்களிலிருந்து வேலை நீக்கஞ் செய்யப்படக்கூடிய கிளாக்குமாருக்கு நிவாரணவளிப்பதற்காக, மந்திரிசபையார் ஒரு திட்டத்தைத் தயாரிப்பதுபற்றி ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

சிக்கனமுறையால் வர்த்தக ஸ்தாபனங்களிலிருந்து நீக்கப்படக்கூடிய சிப்பந்திகளின் புள்ளி விபரத்தைத் தொழில்மந்திரி தயார் செய்வாரெனவும் அவை மந்திரிசபையின் ஆலோசனைக்காகச் சமர்ப்பிக்கப்படுமெனவும் தெரிகிறது.

வர்த்தக ஸ்தாபனங்களிலிருந்து நீக்கப்படக் கூடிய கிளாக்குமாருக்கு வேலை கொடுக்க மந்திரிசபையார் கூடிய மட்டில் முயற்சி செய்வார்களெனவும், அண்மையில் அரசாங்கத்தால்ஆரம்பிக்கப்படக்கூடிய பல்வேறு கட்டடங்களில் அவர்களுக்குத் தற்காலிகமாக வேலைகளைக் கொடுத்துதவப்படுமெனவும் கூறப்படுகிறது.

பகிரங்க இலாகாத் திட்டங்களில் அநேகம் நிறுத்தி வைக்கப்பட்டபோதிலும், அவ்விலாகாவுக்குட்பட்ட தினச்சம்பளத் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவதில்லையெனப் போக்குவரத்து மந்திரி உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் பழ. சோம. சோமசுந்தரஞ் செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின் படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

| நம். | தி. | ரு. | ஊரும் பெயரும் நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| | | | 1934ம் ஆண்டு டிசம்பர்மாசம் |
| 1578 | 10 | 30 | நவாலி வயிரமுத்து முருகேசர் பொன் கவுத்தோர் 1ம் புறேச்சு 1ம் மோதிரம் 1ம் |
| | | | 1937 ஏப்பிரல் மாசம் |
| 3094 | 20 | 18 | ஆவரங்கால் சி. கதிரிப்பிள்ளை பொன் அச்சாக்கூடு 1 |
| | | | ஜூலை மாசம் |
| 3175 | 3 | 75 | கைதடி சங்கரப்பிள்ளை சின்னையா பொன் ஒன்றில் திருகில்லாத பூக்காப்பு சோடி 1ம் தாயித்து கோர்த்த செயின் 1ம் |
| | | | ஆகஸ்டு மாசம் |
| 3 09 | 5 | 65 | கலட்டி தம்பையா செல்லையா பொன் அருணச்சோடி 1 |
| 3212 | 9 | 180 | துசவன்துளம் ஈ. த. செல்லையா பொன் தாலிஇல்லாத கொடி1 |
| 3228 | 22 | 7 | புங்குடுதீவு நாகப்பர் ஐயர்பிள்ளை பொன் நெளிந்த காதா மோதிரம் 1 |
| | | | செப்டம்பர் மாசம் |
| 3253 | 15 | 35 | நீராவியடி கந்தசாமி சோமசுந்தரம் பொன் திருகு சுரை இல்லா நெல்க்காப்பு சோடி 1 |
| 3264 | 25 | 125 | வண்கிழக்கு சடையன் முத்தய்யா பொன் திருகு சுரை இல்லாத கொடி 1 |
| 3266 | 27 | 120 | கலட்டி வல்லிபுரம் செல்லத்துரை பொன் திருகு சுரை இல்லாத கொடி 1 |
| | | | நவம்பர் மாசம் |
| 3337 | 27 | 40 | நீராவியடி கந்தசாமி சோமசுந்தரம் பொன் மிளகுகாப்பு சோடி1 |
| | | | 1938 ஜனவரிமாசம் |
| 3392 | 18 | 140 | கோக்குவில் சின்னத்தம்பி நாகராஜா பொன் திருகுசுரை இல்லாத கொடி 1 |
| | | | பிப்ரவரி மாசம் |
| 3400 | 3 | 150 | கோக்குவில் கந்தப்பு சின்னத்துரை பொன் திருகு சுரை தாலி இல்லாத கொடி 1 |
| 3414 | 15 | 95 | கோக்குவில் சின்னத்தம்பி கந்தையா பொன் திருகுசுரை தாலி இல்லாத கொடி 1 |
| 3415 | 16 | 185 | வண்கிழக்கு இளையதம்பி குழந்தைவேலு பொன் கொலிசு காப்பு சோடி 1ம் கைச் செயின் 1 |
| 3420 | 21 | 115 | மட்டுவில் செல்லப்பா தங்கராசன் பொன் இமிசல் அச்சாக்கூடு கோர்த்த பளுதுள்ள கொடி 1 |
| | | | மே மாசம் |
| 3487 | 14 | 8 | வண்மேற்கு மெம். வன்னியசிங்கம் பொன் சொருகு இல்லாத அச்சாக்கூடு 1 |

விற்பனவு நிகழும் பிரமாதிவருஷம் ஐப்பசிமாசம் 8ந் திகதி (24-10-30) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டநகை பிறநீங்கலாக மீதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயர்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்,

(Mis. 167, 9 & 12-10-39.)



## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் கோக்குவில் கிழக்கு ஆறுப்பிள்ளை குட்டித்தம்பியிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல | திகதி | ரு | பேர் ஊர் நகைகளின்விபரம் |
|---|---|---|---|
| 5467 | 28 8- 37 | 8 | செல்லையா தம்பிப்பிள்ளை கோக்குவில் மேற்கு வெள்ளைக்கல் மோதிரம் 1 |
| 5508 | 6-9- 37 | 10 | தம்பு கார்த்திகேசு கோக்குவில் கிழக்கு பதக்கம் டிம்பியுட் பட 1 |
| 5680 | 23-10-37 | 15 | ஐயம்பிள்ளை அப்பாப்பிள்ளை சுன்னாகம் அச்சாக்கூடு தகடுட்பட 1 |
| 6384 | 12-4- 38 | 8 | கனகர் பொன்னுத்துரை கோண்டாவில்மேற்கு வெள்ளைக் காதோலை சோடி 1 |
| 6464 | 26-4- 38 | 70 | வல்லிபுரம் இராசையா கோக்குவில் கிழக்கு முடிச்சுக்குத்தி அட்டியல் பதக்குட்பட 1 |
| 7024 | 15-8- 38 | 15 | கறுப்பன் கந்தசாமி கோக்குவில் கிழக்கு மோதிரங்கள் 3 |

விற்பனவு பிரமாதி வருஷம் ஐப்பசி மாதம் 5-ந் திகதிக்குச்சரியான 1939-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 9 மணியளவில் எடுபட்டநகை பிறநீங்கலாக மீதி மேற்சொல்லப்பட்ட அடைவுபிடிப்பவர் வீட்டில் விற்பனவு நடைபெறும்.

M. சிவசிதம்பரப்பிள்ளை,
வெந்திஸ் மேஸ்தர்.

Mis 165 9 & 12-10-39

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893 ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டனச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணிழக்கு சரு. சித. சிதம்பரம் செட்டியார் அவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த லலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| நம் | உ | ரூ | ச | ஊர் பெயர் நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| | | | | 1938-ம் ஆண்டு பெப்ரவரி |
| 2600 | 26 | 190 | | சித்தன்கேணி செல்லப்பா நாகலிங்கம் இமி வெள்ளைக்கல் பதக்கத்துடன் லடமன் அட்டியல் 1 இமிக் கல் கெட்டிக் காப்புசோ 1 |
| | | | | 1938-ம் ஆண்டு மார்ச்சு |
| 2812 | 28 | 125 | | இணுவில் கு சவுரிமுத்து ஆசைப்பிள்ளை இமிக்கல் முகப்புடன் கெட்டிக் கொலுசு சோடி 1 |
| 2835 | 30 | 30 | | சித்தன்கேணி செல்லப்பா நாகலிங்கம் சில கல்லில்லாத இமிக்கல் பெண்டனுடன் கொழுக்கியில்லாத சங்கிலி 1 |
| | | | | 1938-ம் ஆண்டு ஏப்ரல் |
| 2876 | 4 | 150 | | வட்டுக்கோட்டை சுக்தையா கார்த்திகேசு வயிரச்சன்னம் ஆறு கட்டிய தோடு சோடி 1 |
| 2936 | 10 | 18 | | புத்தூர் சின்னத்தம்பி பெரியதம்பி இன நாட்டுக்கடுக்கன் சோ 2 |
| 2965 | 12 | 260 | | புத்தூர் கதிரேசு சின்னத்தம்பி இமிக் கல் முகப்புடன் கொலுசு சோடி 1 டை கல் பதக்கத்துடன் முருச்சுக்குத்தி அட்டியல் 1 டை அட்டியல் 1 |
| 3020 | 23 | 7 | | சோனகதெரு மீருன்சாகிபு மிஸ்கீன் சாகிபு சுசிவு பெட்டி மோதிரம் 1 |
| 3043 | 26 | 6 | | சாவற்குளி கே. பி. பாசுப்பிள்ளை வெள்ளைக்கல் கடுக்கன் சோ 1 |
| 3075 | 30 | 20 | | பன்னூர் யோசேப் மருசலீன் இன பூடிசோடி 1 டை ஒன்னப்பு சோடி 1 சிறுமணிக்கோர்வை 1 |
| | | | | 1938-ம் ஆண்டு மே |
| 3113 | 4 | 90 | | இணுவில் கு ச ஆசைப்பிள்ளை துண்டுச் சங்கிலி 1 சுசிவு காப்பு சோடி 1 |
| 3716 | 4 | 23 | | வண்ணிழக்கு தம்பிச்சாமி பஞ்சாக்ஷரம் அக்ஷரக்கூடு 1 |
| 3130 | 6 | 145 | | சங்குவேலி முத்துக்குமாரு இராமலிங்கம் இமிக்கல் பதக்கத்துடன் செட்டிப்பூரான் அட்டியல் 1 |
| 3131 | 6 | 25 | | சந்தவேலி முத்துக்குமாரு இராமலிங்கம் இமிக்கல்சவுக்தோர் 1 |
| 3137 | 6 | 17 | | வண்ணேற்கு நாகலிங்கம் பெண் ஆச்சிப்பிள்ளை கைச்சங்கிலி 1 |
| 3163 | 9 | 9 | 50 | குசவன்குளம் கு ஆச்சிக்குட்டி குண்டுவைத்த அரைப்பவுன் காசு 1 |
| 3256 | 18 | 7 | | தெல்லிப்பளை இளையதம்பி ஐடாத்துரை மணிக்கோர்வை 1 |
| 3278 | 20 | 48 | | கோண்டாவில் சின்னப்பு மார்க்கண்டு மினுகாப்பு சோடி 1 |
| 3381 | 2 | 60 | | சங்கானை சின்னத்தம்பி ஐயாத்துரை இன குண்டு இரண்டுடன் பின்கோர்க்கியில்லாத சாட்டுக்கொடி 1 |
| 3406 | 5 | 13 | | சண்டிலிப்பாய் செல்லமுத்து சுப்பிரமணியம் பெட்டிமோதிரம் 1 |
| 3432 | 7 | 44 | | சுளிபுரம் சின்னப்பு ஆறுமுகம் ஆடுதன மோதிரம் 1 தாயித்து 1 |
| 3495 | 14 | 35 | | தட்டாதெரு சுப்பையா சினித்துரை இமிக்கல்புரோச் 1 |
| 3536 | 18 | 25 | | கோண்டாவில் ஆறுமுகம் பொன்னையா இமிக்கல்புரோச்சு 1 |
| 3568 | 22 | 50 | | கோண்டாவில் ஆறுமுகம் பொன்னையா அச்சுக் காப்பு சோடி 1 |
| 3630 | 28 | 17 | | அராலி நாகலிங்கம் சின்னையா இமிக்கல் சவுத்தோர் 1 |
| | | | | 1938-ம் ஆண்டு ஜூலை |
| 3656 | 1 | 6 | | சங்கானை தம்பிப்பிள்ளை கனகரெத்தினம் இமி சிகப்புக்கல் தோடு சோடி 1 |
| 3685 | 5 | 20 | | சங்கானை சின்னத்தம்பி ஐடாத்துரை முத்துக்கட்டிய சிறிது பெரிது தோடு சோடி 2 இமி கினாவர் குச்சி சோடி 1 டை ஒத்தைக்கல் கினாவர் குச்சி சோடி 1 |
| 3691 | 5 | 6 | | சங்கானை வயிரமுத்து இராசையா கல்வாளி சோடி 1 |
| 3724 | 9 | 70 | | அளவெட்டி சபாபதி செல்லமுத்து குண்டுச்சங்கிலி 1 |
| 3725 | 9 | 28 | | தட்டாதெரு சுப்பையா சினித்துரை பின்னல் மோதிரம் 1 லுபேட் மோதிரம் 1 |
| 37?5 | 10 | 25 | | கல்லூர் சித்தாரம் முருகையா இமிக்கல் கிளேட் 1 |
| 3745 | 12 | 18 | | சண்டிக்குளி தம்பிப்பிள்ளை சரவணமுத்து இமிக்கல் அக்ஷரக்கூடு 1 |
| 3761 | 14 | 142 | | வண்ணிழக்கு செல்வராயர் மகாதேவராயர் பிரெஞ்சு காசு 15 கோர்த்த குண்டுச்சங்கிலி 1 காப்பு 1 |
| 3768 | 14 | 17 | | சங்கானை குமரேசு சபாபதி இமி ஒற்றைக்கல் கடுக்கன் சோடி 1 திருமாங்கலியம் 1 |
| 3781 | 16 | 25 | | சோனகதெரு மீ செயினுமுகம்மது கைச்சங்கிலி சோடி 1 |
| 3790 | 16 | 8 | | கொக்குவில் கந்தர் காத்தி இமி சிகப்புக்கல் தோடு சோடி 1 |
| 3803 | 18 | 55 | | சங்கானை முருகேசு விசுவலிங்கம் சங்கிலி 1 |
| 3819 | 18 | 150 | | கோண்டாவில் பொன்னையா குமாரசாமி தாயத்துக் கோர்த்த இரண்டுபட்டுக் குண்டுச்சங்கிலி 1 |
| 3844 | 21 | 90 | | சோனகதெரு மீ முகையதீன் அப்துல் காதர் அச்சுக்காப்பு சோடி 1 |
| 3849 | 21 | 15 | | நீர்வேலி சின்னத்தம்பி சின்னையா மருக்கன்கல் பதக்கம் 1 காப்பின் முகப்பு சோடி 1 |
| 3851 | 21 | 25 | | செம்மாதெரு ஆர் எடிபன் இமிக்கல் சவுத்தோர் 1 |
| 3854 | 22 | 27 | | மண்டைதீவு ஆறுமுகம் பொன்னம்பலம் இமிக்கல் சவுத்தோர் 1 டை கல் குச்சி சோடி 1 |
| 3864 | 23 | 7 | | மாதகல் இன்னாசிமுத்து ராசா இமிக்கல் மோதிரம் 1 |
| 3870 | 24 | 25 | | வண்மேற்கு சின்னத்தம்பி பெரியதம்பி அச்சாக்கூடு 1 |
| 3883 | 25 | 6 | | சன்நதிட்டி கந்தசாமி தரைராசா இமிக்கல் மோதிரம் 1 |
| 3384 | 25 | 15 | | மாதகல் அருளம்பலம் செல்லத்துரை சாவடியில்லாத பின்னைக் காப்பு சோடி 1 |
| 3887 | 25 | 150 | | சங்கானை சின்னத்தம்பி ஐயாத்துரை வளையல் காப்பு சோடி 2 இமிக்கல் புரோச்சு 1 டை கல் கிளேட் 1 ஒபல் கல்லில் இமிக் கல் செடி வேலைசெய்த பெண்டன் கோர்த்த சங்கிலி 1 |
| 3911 | 28 | 60 | | இணுவில் ஆசைப்பிள்ளை சத்தியாப்பிள்ளை ஒற்றைக் குண்டுச் சங்கிலி அட்டியல் 1 |
| 3923 | 29 | 10 | | புத்தூர் சின்னத்தம்பி பெரியதம்பி இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 3944 | 31 | 50 | | கோனுன்தோட்டம் நாகனுதி கணேசன் இரண்டு பட்டுச் சைச்சங்கிலி 1 |

விற்பனவு நிகழும் பிரமாதி வருஷம் ஐப்பசி மாதம் 4-ந் தேதி (21-10-39) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டகை பிறகிலாக மிதுதி மேற்படியார் கடையில் பிரசித்த லலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்தீல்மேஸ்தர்.

Mis 161 5 & 6-10-39

## யுத்த சமாச்சார வியாக்கியானங்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சேர்க்க பிரிட்டிஷ் படையினரைச் சகமுசாதியின் 20 விமானங்கள் சேர்ந்து ஒரு படை தாக்கியது. பிரிட்டிஷ் கப்பல்களுக்குக் குண்டுகள் படவுமில்லை; சேதமுற்றனவுமில்லை. சத்துராதி மாத்திரம் 2 விமானங்களை யிழந்தனர்.

செப்டெம்பர் 29-ந் திகதி பிரிட்டிஷ் ராஜாங்க விமானப்படை ஹெலிகோலண்ட் பற்றிதுள்ள ஜேர்மன் கப்பற் படையைத் தாக்கியதாக விமானப்படை மந்திரியின் காரியாலயம் கூறுகின்றது. விமான எதிர்ப்புப் பீரங்கிகள் பயங்கரமாகச் சுட்ட போதிலும், விமானங்கள் மிகவும் கீழே பறந்து கப்பல்களை நன்றாகத் தாக்கினவாம். விமான எதிர்ப்புப் பீரங்கிகளுடைய சூட்டினாலே சிறு நட்டங்கள் ஏற்படுவதும் இயல்பே.

பிரிட்டிஷ் கடற்படை தனது பராம்பரைப் பெருமைக்கு இணங்கக் கடலிலே முற்றுகைத் தனி ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஜேர்மன் வியாபாரக் கப்பல்களெல்லாம் கடலிலமை வகிக்கும் தேசத்துத் துறைமுகங்களுக்கேனும் ஜேர்மன் கடலுக்கேனும் தாக்கப்பட்டு விட்டன. சமுத்திரத்திலே ஒரு ஜேர்மன் சரக்குக் கப்பலையாவது பிரயாணிக் கப்பலையாவது காணமுடியாது. இது ஜேர்மன் கப்பற் போக்குவரவையும் ஜேர்மன் தொழில்களையும் எவ்விதம் பாதிக்கும் என்பதை சிக்கனே இலகுவில் யோசித்துக் காணலாம். ஜேர்மன் சிக்கனமுறைகளைப் பூரணமாகச் சற்றே வினாத்தாயிற்று. அவர்களுடைய நீர்மூழ்கிகளினாலே சேருந் தொந்தரவுகளை நீக்குவதற்கும் பிரிட்டிஷ் ஓர் வழியைக் கண்டு பிடித்திருக்கிறது. சாமான்களையும் பிரயாணிகளையும் ஏற்றுவதில் ஈடுபட்டிருக்கும் பிரிட்டிஷ் கப்பல்களையெல்லாம் நீர்மூழ்கிகளையும் விமானங்களையும் எதிர்த்துப் போராடத்தக்க பாதுகாப்புக்குரிய ஆயுதங்களினாலே பெலப்படுத்தியிருக்கிறது. இவ்விஷயமாகக் கடற்படை நிர்வாகம் செய்திருக்கும் வேலையை அத்திர்வாகத்தின் முதற்பெரும் தலைவராகிய Mr வின்ஸ்டன் சேர்ச்சில் சென்ற செவ்வாய்க்கிழமை மிகவும் புகழ்ந்து பாராட்டினர். யுத்தந் தொடங்கிய 2 வாரத்திற்குள்ளாக ஆறோ ஏழோ நீர்மூழ்கிகளைப் பிரிட்டிஷ் நாசகாரிகள் அழித்துவிட்டன. காவற் கப்பல்கள் துணையாகச் செல்லும் ஒழுங்குகளினாலே வியாபாரக் கப்பல்களுக்கு நீர்மூழ்கிகளாலேற்படும் தொந்தரவு குறைந்துவிட்டது. யுத்தந் தொடங்கிய முதல் மூன்று கிழமைகளிலும் பிரிட்டிஷ் காரருக்குச்சேர்ந்த நஷ்டங்களைப் பற்றி Mr சேர்ச்சில் கூறிய விபரங்கள் மிகவும் உற்சாகத்தை யளிக்கின்றன. கப்பல் விவகாரத்திலே பிருத்தானியாவுக்கு 140,000 தொன்வரையில் நட்டம். ஆனால் சாழ்க்கப்பட்ட பிரிட்டிஷ் கப்பல்களிலும் பார்க்க ஜேர்மன் சரக்கில 67 000 தொன் கூடத் தன பாவிப்புக்குக் கைப்பற்றியிருக்கிறது. இதைவிடச் சத்துராதிக்குரிய 50,000 தொன் Petroleum எண்ணெய் வேறாகக் கைப்பற்றியிருக்கிறது.

### ஏனைய புதினங்கள்

7. 'எஸ்தோனியா' என்பது போல்றிக்கடலை யடுத்திருக்கும் ஒருசிறு தேசம். அது ருஷியாவுக்குப் 10 வருஷத அன்னியோன்னிய உதவியின் பொருட்டு ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறது. அதன்படி சன தபல தீவுகளிலும் ருஷியாவுக்குக் கப்பல் நிலையங்களும் ஸ்தாபித்து கடந்தும் உரிமையை எஸ்தோனியா கொடுத்திருக்கிறது.

8. யுத்தச் செலவின் பொருட்டுக் கொம்மன்ஸ் Commons சபையிலே கொண்டுவந்திருக்கசெலவுத்திட்டத்திலுக்கு பிரித்தானிய காரியம் வெற்றிகரமாக நிறைவேறும்வரைக்கும் போர்புரியத் துணிந்திருக்கும் மனேநிலைத்தை நன்றாக அறியலாம். சேர்முகமாகவும் மறைமுகமாகவும் வரிகள் நன்றாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. அடுத்த மார்ச்சு மீ முடியும் வருடத்திற்கு 20 கோடி பவுண் அதிகச் செலவு செய்ய நினைத்திருக்கிறார்கள். இக்க விஷயமாக மிகவாத எதிர்கட்சித் தலைவர் லோர் அத்திபோல்ட் சின்கிலேயர் கூறியது மிகவும் கிளைக்கத்தக்கதாகும். வெற்றியடையும் பொருட்டு ஜனங்கள் பொறுக்கமுடியாத அளவுகடந்த செலவுகளையோ தியாகங்களையோ செய்து தட்டுக்கேடடைவது வழக்கம். ஆனால் எங்களுடைய செலவுத்திட்டமோ அதிகரித்திருந்தபோதும் எவ்வளவு காலந்தான் சென்றாலும் தட்டுக்கேடு வாத்தக்க நிலைக்குக் கட்டக்கூட எங்களைக் கொண்டு வராது என்று சொன்னர்.

9. அந்நியம் காசிக்கட்சியின் வெருட்டுதலுக்குட பிரிட்டிஷ் மறுமொழியென்னவென்பது சாங்களறிந்ததே. இன்னும் 250,000 பேரைப் படையிலே சேர்த்திருக்கிறது. இதுதான் சரியான மறுமொழி.

காசித்தத்துவத்தை நசித்துப் போலத்தை மிகவும் காட்டினுலன்றி அதற்கு முன்பு சமாதானம் கிடையாது.


**யாழ் நகரில் சுத்தமான கோதுமையினுல் தின் பண்டங்கள் முதன்மையாய் விற்குமிடமெது?**

1865ம் ஆண்டு எஸ். பேதுருப்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற தற்போது தி பிறிமியர் பேக்கரி என அழைக்கப்படும் ரொட்டிச்சாலை மாத்திரமே.



இங்கே சுத்தமான கோதுமை அப்பம் விஸ்கோத்து வகைகளும், இனிமையான கேக் சிற்றுண்டி வகைகளும், நவீன முறையில் சுகாதார விதிப்படி மதக் கோட்பாடுகளுக்கு எதிர்ப்பில்லாத சேர்ப்புகளினுல் தயாரிக்கப்பெற்ற மட்டான விலையில் விற்கப்படும்.

கலியாண காலங்களுக்கும், கல்லூரி ஆண்டுவிழாக் கொண்டாட்டங்களுக்கும் முக்கியமான சிற்றுண்டி விருந்துகளுக்கும், கேக், அதிரச வகைகள் மதுரமாயும் கவர்ச்சியாயும் அதிக சகாய விலைக்கு உடன் தயாரித்துக் கொடுக்கப்படும்.

**The Premier Bakery**
(பேதுருப்பிள்ளை ரொட்டிச்சாலை.)
Bakers—Confectioners—Caterers

Bankshall Street
Estd. 1865.

Jaffna
'Phone. 44.

Y 160 29-9-38—28-9-39 தீ

# N. வைத்திலிங்கம் & கம்பெனி

**பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.**

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்னிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo

**Telephone No. 30.**

(Y 65 1-4-38—31-3-39) தி

# சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதரூ, சாலாமுளலி, சப்பேமுசவிலி, பிஸ்தான், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பு, லக்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனுல் சீதழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தசாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிடுவதால் மேற்சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் ருசுவாயு பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரைருத்தலுக்கு ரூபா 10 கால்ருத்தலுக்கு ரூபா5 தபாற்செலவுபிரத்தியேகம் சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிக்கு வீ. பி சட்டம் இல்லாததனுல் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகப்பிள்ளை
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய வைத்தியசாலை,
வீட்டிலக்கம்33 பழையவாடிரோட்டு,கோட்டைமுனை,மட்டக்களப்பு,சிலோன்.

Y6 (4-1-39 to 31-12-39)

# தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச் சாமான்கள் சிமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்

பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y50, 4-9 to 3-3-40


இந்துசாதனத்திற்கு இன்றே விளம்பரஞ் செய்யுங்கள்

№ 913

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Monday October 9th 1939.